THE "VAKIL" – TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

269

# "வக்கீல்"

269
4-50

இந்த இதழில்

"அமிதப் பதுக்கலு"க்குக் கடும் தண்டனை.

தொழில் தகராறு அப்பீல் கோர்ட் சட்டம்

கிராம பஞ்சாயத்து சட்டம்

பல தாரத் தடை சட்ட வழக்கு

வழக்கும் — தீர்ப்பும்

கேள்வி — பதில்

கண்ட்ரோல் உத்தரவுகள்

மோட்டார் தொழிலாளர் சம்பள நிர்ணயம்.

சர்க்கார் அறிக்கைகள்

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

## தமிழ்

## சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)



1699

THE "VAKIL" ~ செப்டம்பர்-1950 ~ 4 அணா




## விரைவில் வெளிவருகிறது

நடிகர்கள்

கெம்ப்ராஜ் ராஜம்மா

ஜெயம்மா எஸ். எஸ் சுப்பய்யா

அங்கமுத்து சேதுராமன்

முதலானோர்

★

டைரக்ஷன் கெம்ப்ராஜ்

ஸ்டுடியோ ஸ்டார் கம்பைன்ஸ்

★

விபரங்களுக்கு

கெம்ப்ராஜ் ப்ரொடக்ஷன்ஸ்

தேரடித் தெரு மைலாப்பூர், சென்னை

---

# விஜயா ஔஷதசாலை

1, சக்ரபாணி கோவில் வடக்கு வீதி, கும்பகோணம்.

சில முக்கிய தயாரிப்புகள் உத்திரவாதமுள்ளவை

1. விஜயா காயகல்பம் யௌவனமளிக்கும் டானிக்.
2. வில்வாதி லேகியம்.
3. சவனப்பிராசம்.
4. ஸௌபாக்யசுண்டி.
5. அச்வகந்திரஸாயனம்.
6. விஜயா ஆயிண்ட்மெண்ட் எல்லா சர்ம ரோகங்களுக்கும்.
7. தாமரை தைலம்.
8. குமரி தைலம்.
9. கருஞ்செம்பை தைலம்.
10. பிருங்காமலக தைலம்.
11. க்ஷீரபலா தைலம்.

தவிர செந்தூரங்கள், பஸ்மங்கள், லேகியங்கள், தைலங்கள் சிறந்த ஆயுர்வேத முறைப்படி தயார் செய்து சரஸமான விலைக்கு கொடுக்கப்படும்.

எல்லாவித வியாதிகளுக்கும் சிகிச்சை செய்யப்படும்.

ஏஜண்டுகள் தேவை

ஆயுர்வேதரத்னம் R. ராமானுஜாச்சாரியார்,

Registered Medical Practitioner (Indian System)

**சந்தாதாரர்கள் கவனிக்கவும்**

வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்குச் சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். சந்தா முடிந்தவுடன் புதிதாய்ச் சந்தா அனுப்பும்போது பழய சந்தா நம்பரைக் கண்டு எழுதவும். சந்தா நம்பர், சந்தாதாரரின் தபால் விலாசத்திற்குமேல் கொடுக்கப்பட்டிருக்கும் எண்தான்.


"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி



ஸ்ரீ T. சம்பத், B. A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B.A. B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L.


## "வக்கீல்"
## (சந்தா விபரம்)

| | |
|---|---|
| வருட சந்தா அதாவது 12 இதழ்களுக்கு | ரூ. 3—0—0 |
| தனிப் பிரதி ... | 0—4—0 |
| வெளிநாடு வருட சந்தா ... | 6—0—0 |

"வக்கீல்" காரியாலயம்

தபால்பெட்டி நெ. 26 : கும்பகோணம்

## "வக்கீல்"
## விளம்பர விகிதம்

ஒரு முறை பிரசுரம் செய்ய

| | |
|---|---|
| பின் அட்டை முழுப்பக்கம் (இரண்டு கலர்) | ரூ. 100 |
| உள் அட்டை முழுப்பக்கம் | ரூ. 80 |
| உள் பக்கம் முழுப்பக்கம் | ரூ. 60 |
| ஷை ... அரைப் பக்கம் | ரூ. 35 |
| ஷை ... கால் பக்கம் | ரூ. 20 |
| ஒரு காலம் - அங்குலம் | ரூ. 5 |

(தொடர்ச்சியாய் 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)


# "வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 2 செப்டம்பர் 1950 இதழ் 9


## பொருள் அடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **குறிப்புகள்** | |
| மறியல் | 3 |
| **புதிய சட்டங்கள்** | |
| சுருக்கியும்—வரிசையாயும் | 4 |
| **புதிய சட்டங்கள்** | |
| பொறுக்கியும்—விவரமாயும் | |
| கிராம பஞ்சாயத்து சட்டம் | 5 |
| தொழில் தகராறுகள் - அப்பீல் கோர்ட் சட்டம் | 10 |
| **வழக்கும்-தீர்ப்பும்** | |
| பல தாரத் தடைச் சட்ட வழக்கு | 12 |
| ரயில்வே சட்டடத்தில் வைக்கப்படும் மூட்டைகள் திருட்டுப்போனல் | 13 |
| திருட்டுப்போன சாமான் யாரிடமிருக்கிறதோ அவர் குற்றவாளியா? | 15 |
| **கேள்வி-பதில்** | 17 |
| **கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்** | |
| விலை நிர்ணயம்— இதர சர்க்கார் அறிக்கைகள். | 21 |



★ "வக்கீல்" பத்திரிகையில் செய்யும் விளம்பரம் தமிழ் மக்கள் வசிக்கும் இடமெங்கும் பரவும். ★

87699

★

ஜாதகம்! ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விபரம்: 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 3. ஒரு தசாவிற்கு புக்திவாரியாக பலன் எழுத ரூ. 12.

குறிப்பு: வெளிநாட்டுக்கு இரட்டிப்பு கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—

தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

**மானேஜர்: வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ**

தெப்பக்குளம் P. O., திருச்சி.

---

## "எலிக்ஸிர் அஸ்வகந்தா"

மகரிஷிகள் ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவைகளை அனுபவித்து உதவி அருளிய சிறந்த ரத்த விருத்தி லேகியம் இதுவே. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி வயிறு, முதுகு, இடுப்பு வலிகள் ஒழித்து நல்ல பசியையும், நித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும். தவிர இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம் இவைகளைக் குணப்படுத்தும். வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது "எலிக்ஸிர் அஸ்வகந்தா"வே.

40 தோலா கொண்ட டின் ரூ. 10
தபால் செலவு பிரத்தியேகம்

ஆயுர்வேத வைத்தியர்

**T. V. ஜெயராம சாஸ்திரிகள்**

வீரராகவ வைத்திய சாலா,
ஸ்ரீரங்கம் P. O., S. I.

---

3 பாகமுள்ள

**இதிஹாஸ புராணக் கதைகள் ரூ. 10.**

இதில் ராமாயண, பாரத, பாகவதக் கதைகள் யாவரும் படிக்க தமிழில் எழுதப்பட்டுள்ளது. இப்பொழுது பாகவதக் கதைகள் 3 ரூபாய் விலையில் தயாராயிருக்கிறது. மற்ற இரண்டும் தை மாதத்திற்குள் வெளியாகும். இப்பொழுது இந்த தொகையை (ரூ. 10.) அனுப்பிவிடுகிறவர்களுக்கு எங்கள் தபால் செலவிலேயே இதை இப்பொழுது அனுப்பி, மற்ற இரண்டையும் தயாரானதும் ரிஜிஸ்டர் செய்து அனுப்பிவிடுவோம். தவிரவும் 1 ரூபாய் விலையுள்ள 32 பக்தர்கள் சரித்ரம் என்பதையும் அடுத்த மாதம் அனுப்புகிறோம். தபால் சார்ஜ் ரூ. 2 ஆகும்.

**நித்யகர்மானுஷ்டான விதிகள் ரூ. 1.**

ஏஜண்டுகளுக்கு விசேஷ கமிஷனுண்டு. எங்கள் புஸ்தகசாலையில் இதர புஸ்தகங்களும் கிடைக்கும். எங்கள் ப்ரசுரங்கள் பல உள்ளன.

**நே. ஈ. துரைஸாமி ஐயங்கார்,**

தக்ஷிணதேசக்ரந்தாலயம், 7, ரங்கராயர் அக்ரஹாரம்,
கும்பகோணம், S.I.Ry.

---

**தாக சாந்தி!** **மன இன்பம்!!**

நீங்கள் அருந்தும் ஒவ்வொரு துளியிலும் அமிர்தம் போன்ற சுவையைக் காண்பீர்கள்! உயர்ந்த முறையில் தயாரித்துள்ள ஷர்பத்பான வகைகள் விலை நயம், அன்பர்கள் யாவரும் விஜயம் செய்யுங்கள்!

**பாம்பே ஐஸ் கூலிங் அண்டு ஷர்பத் கம்பெனி**

103, பெரிய தெரு, :: கும்பகோணம்.

---

## "ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"

**1 மண்டலம் (48 நாள்) பூஜை செய்தும் ஆயுள் பூராவும் பலன் தரும் வெள்ளி ரக்ஷை ரூ. 43—12—0**

ஸ்ரீ மகாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். டி தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாக தேவை. மீதி ரூ. 38/ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பிவைக்கவும்.

N.B. (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்பு தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

**ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்,**

கோட்டமருதூர், அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt.)

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 2 செப்டம்பர் 1950 இதழ் 9

# குறிப்புகள்.

**மறியல்**

"விலைவாசிகள் உயர்வைத் தடுப்பதற்காக, அதிக விலைக்கு விற்கும் கடைகளை மறியல் செய்து, பொதுமக்கள் நேரடி நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்தால், சர்க்கார் அதைத் தடை செய்ய மாட்டார்கள். ஆனால் அத்தகைய நடவடிக்கைகள் சாத்வீக முறையைப் பின் பற்றியதாக இருக்கவேண்டும்"—சென்னை சட்ட சபையில் நிதி மந்திரி ஸ்ரீ கோபால ரெட்டியார் பேசியது.

இதைத் தினசரிப் பத்திரிகைகளில் படித்தவுடன் உங்கள் வறண்ட நாக்கில் ஜலம் ஊறுகின்றதா? மரத்துப் போன உங்கள் கைகள் துறுதுறு வென்று இருக்கின்றனவா? பட்டினியால் சக்தி இழந்த உங்கள் கால்கள் உங்கள் பக்கத்திலிருக்கும் கடைகளை நோக்கி இழுக்கின்றனவா? மறியல் செய்யக் கிளம்பி விட்டீர்களா? சற்று நிதானியுங்கள்! யாரைப் பயமுறுத்தப் போகின்றீர்கள்? பனங்காட்டு நரியா உங்கள் சலசலப்புக்குப் பயப்படும்? உடல் நடுங்கும் ஷரத்துக்களைக் கொண்டுள்ள சட்டங்களுக்கும் துப்பாக்கியுடன் நிற்கும் போலீஸ்காரர்களுக்கும், சக்தி வாய்ந்த நீதி மன்றங்களுக்கும் பயப்படாதவர்களா உங்கள் சாத்வீக மறியலுக்குத் தலை வணங்கப் போகின்றனர்? பண்டங்களை உள்ளே பதுக்கிப் பொது மக்களை வெயிலிலும் மழையிலும் 'க்யூ' வரிசையில் மணிக்கணக்காக நிறுத்தி, இஷ்டப்பட்ட விலைக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பண்டங்களை விநியோகம் செய்வதில் பழக்கமுள்ள பதுக்கல் வியாபாரியா உங்கள் மறியல் கூட்டத்தைக் கண்டு மிரண்டு விடுவார்? பிரமைதான். இவ்வளவு சொல்லியும் கேட்காமல் நீங்கள் மந்திரியின் பேச்சுக்கிணங்கி மறியலுக்குப் போனால், போங்கள். ஆனால் மறியல் செய்வதில் அலுத்துப் போய், கொஞ்சமேனும் உள்ள சாத்வீகத்தன்மையையும் நீங்கள் இழந்து, உங்கள் வருமானத்தால் தொடமுடியாத மிளகாய்வற்றலையும் கொத்தமல்லிவிதையையும் உங்கள் கைகளால் தொட்டுப் பார்க்கப் போனீர்களானால்—ஜாக்கிரதை உடனே சட்டம் கட்டாயமாக உங்களைக் கவ்விக்கொள்ளும். மந்திரி சொல்லும் "நேரடி நடவடிக்கை" இது அல்ல. மந்திரி சொல்வது நீங்கள் கடைக்கு வெளியில் வெயிலில் சாத்வீகமாக நிற்பதைத்தான் குறிப்பிடும். மேலும் இரண்டு வகைகளில் நீங்கள் ஏமாறலாம். வெகு நேரமாக நீங்கள் மறியல் செய்யும் கடையில் யாதொரு சரக்கும் இல்லாமல் இருக்கலாம். பதுக்கல் செய்யும் இடங்கள் கடைகள் அல்ல. இரண்டாவதாக, ஒழிந்த நேரத்தில், கள்ள மார்க்கெட்காரர்களே வேஷத்தை மாற்றிக்கொண்டு, சாத்வீகமறியல் செய்யும் உங்களுக்குத் தலைவராகவும் வரலாம். உஷார்!

# புதிய சட்டங்கள்
## சுருக்கியும் - வரிசையாகவும்

### அரசியல் சட்ட (சிக்கல் நீக்கும்) உத்தரவு.

[அரசியல் சட்டத்திருத்தம் - ஜனாதிபதி அவர்களால் 11—8—1950 ல் பிரகடனம் செய்யப்பட்டது]

புதிய அரசியல் அமைப்புச் சட்டப்படி சில விஷயங்களில் மத்திய அரசாங்கம் தான் அதாவது பார்லிமெண்ட் அல்லது விசேஷ காலங்களில் ஜனாதிபதி அவர்கள் மட்டில் சட்டங்கள் இயற்ற முடியும். சில விஷயங்களில் அந்தந்த (மாகாண) ராஜ்ய அரசாங்கம்தான் அதாவது ராஜ்ய சட்ட சபைகள் அல்லது விசேஷ காலங்களில், கவர்னர் சட்டங்கள் இயற்ற முடியும். சில விஷயங்களில் இரு அரசாங்கங்களும் சட்டம் இயற்றலாம். இவ்விதம் சட்டம் இயற்றும் உரிமை பிரிக்கப்பட்டிருக்கின்றது. ராஜ்யத்திற்கு மட்டில் சட்டம் செய்ய உரிமை உள்ள ஒரு விஷயத்தில் மத்திய பார்லிமெண்ட சட்டம் செய்தால் செல்லாது—என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கின்றது. ஆனால் ஏதாவது விசேஷ சந்தர்ப்பங்களில் சில ராஜ்ய விஷயங்களிலும், மத்திய பார்லிமெண்ட் சட்டம் செய்ய வேண்டுமானால், பார்லிமெண்டின் மேல் சபை (Council of state) என்ற சபையினர் மூன்றில் இரண்டு பங்குள்ள வாக்கினால் (வோட் செய்வதினால்) ஒரு தீர்மானம் செய்ய வேண்டும். அப்படித் தீர்மானம் செய்த பிறகு, அந்த விஷயங்களில் மத்திய பார்லிமெண்ட்டும் சட்டம் செய்யலாம்.

ஆனால் இன்னும் அரசியல் அமைப்புச் சட்டப்படி பார்லிமெண்டின் மேல்சபை, மக்கள் சபை என்று இரண்டு தனித்தனி சபைகள் அமைக்கப்படவில்லை. இவை இனிவரும் பொதுத் தேர்தலுக்குப்பின் தான் உருவாகும். அதுவரை ஏற்சனவே அரசியல் நிர்ணய சபையாக இருந்த சபையே 'தாற்காலிக' பார்லிமெண்டாக கருதப்படவேண்டுமென்ற அரசியல் சட்ட ஷரத்தை ஒட்டி இப்பொழுது அச்சபையே பார்லிமெண்ட்டாக சட்டங்கள் இயற்றி வருகின்றது.

அரசியல் சட்டத்தின் ஷரத்துக்களையும், நடைமுறையில் சிக்கல்கள் ஏற்படாமலிருக்கும் படி திருத்த ஜனாதிபதி அவர்களுக்கு (முதல் பார்லிமெண்ட் அமைக்கப்படும் வரை) ஒரு விசேஷ தாற்காலிக அதிகாரம் அரசியல் சட்டத்தின் 392 ஆவது ஆர்டிகிள்படி கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த அதிகாரத்தை ஜனாதிபதி அவர்கள் 11—8—50 ல் உபயோகித்து அரசியல் சட்டத்தின் ஒரு ஷரத்து திருத்தப்பட்டது. அதாவது பார்லிமெண்டின் மேல் சபை (Council of state) செய்யக் கூடிய தீர்மானத்தை இப்பொழுது இருக்கும் தாற்காலிக பார்லிமெண்டே ஒரு தீர்மானம் செய்தால் போதும்; உடனே ராஜ்ய விஷயங்களிலும் மத்திய அரசாங்கமே சட்டங்கள் இயற்ற அதிகாரம் வந்து விடுமென்று அரசியல் அமைப்புச் சட்டம் ஜனாதிபதி அவர்களால் திருத்தப்பட்டது.

### பார்லிமெண்டின் தீர்மானம்.

அதை அனுசரித்து இந்திய பார்லிமெண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதாவது (1) வியாபாரம்—வர்த்தகம் (2) சாமான்களின் உற்பத்தி, சப்ளை, விநியோகம்—என்ற இரண்டு விஷயங்களிலும் சட்டங்கள் இயற்ற இப்பொழுது அந்தந்த ராஜ்யத்திற்கு அதிகாரம் இருந்தாலும், அதே இரண்டு விஷயங்களிலும் இந்திய அரசாங்கம் ஒரு வருஷகாலம் சட்டம் செய்யலாமென்று தீர்மானித்தது. இனி மேற்கண்ட இரண்டு விஷயங்கள் சம்பந்தமாய் இந்திய பார்லிமெண்ட்டும், பார்லிமெண்ட் கூடாத சமயங்களில் ஜனாதிபதி அவர்களும் சட்டம் செய்ய உரிமை உண்டு.

### 1950 ஆம் வருஷத்திய (சென்னை) 1 ஆவது அவசரச் சட்டம்.

(சென்னை சட்டசபை கூடாமலிருந்தபடியால் அவசரநிமித்தம் சென்னை கவர்னர் அவர்களால் பிரகடனம் செய்யப்பட்ட சட்டம்) அமுல் வந்த தேதி :—21-7-1950. சினிமா முதலிய காட்சிகளுக்கு வரிவிதிக்கும் சட்டத்தில் (The Madras Entertainment Tax Act-1949) 1949 ஆம் வருடத்திய 17 ஆவது சென்னைச் சட்டத்தின் மூலம் ஒரு புதிய செக்ஷன் சேர்க்கப்பட்டது.

அதாவது எப்பொழுதும் வசூல் செய்யப்படும் "எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸ்" தவிர, சென்னை பட்டணத்தில் நடக்கும் ஒவ்வொரு சினிமாக் காட்சிக்கும் ரூ. 2-8-0 வீதமும் பெரிய முனிசிபாலிடிகளில் நடக்கும் ஒவ்வொரு சினிமாக் காட்சிக்கும் ரூ. 2-0-0 வீதமும் மற்ற முனிசிபாலிடிகளில் நடக்கும் ஒவ்வொரு சினிமா காக்ஷிக்கும் ரூ. 1—8—0 வீதமும் ஒரு அதிகவரி விதிக்கப்பட்டது. ஆனால் இப்புது வரி அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட தேதியாகிய 1—8—1949 முதல் ஒரு வருடத்திற்குத்தான் (1—8—1950 வரைதான்) புது அதிக வரி விதித்த சட்டம் அமுலில் இருக்கும் என்று ஒரு ஷரத்து இருக்கிறது. இந்த அவசரச் சட்டத்தால் மேற்படி ஷரத்து ரத்து செய்யப்பட்டது. அதாவது புது அதிக வரி 1—8—1950 க்குப் பின்பும் நீடிக்கும்.

# புதிய சட்டங்கள்

பொறுக்கியும் - விவரமாயும்

# சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டம்

[1950 ஆம் வருஷத்திய 10-ஆவது சென்னை சட்டம். சென்னை-சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. 15—7—1950ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 1-8-1950 தேதியுள்ள சென்னை - சர்க்கார் கெஜட்டில் பிரசுரமாகி இருக்கிறது.]

**முகவுரை:**—இதுவரை கிராமப் பஞ்சாயத்துப் போர்டுகளும், ஜில்லா போர்டுகளும் 1920 ஆம் வருஷத்திய சென்னை ஸ்தல ஸ்தாபனச் சட்டப்படி (Madras Local Boards Act 1920) அமைக்கப்பட்டு வேலைசெய்து வருகின்றன. இனி, கிராம பஞ்சாயத்துக்களுக்கென்று தனியாக இப்புதுச் சட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இப்புதுச் சட்டம் சென்னை ராஜ்யத்திலிருக்கும் பல்லாயிரம் கணக்கான கிராமங்களுக்குப் புத்துயிர் அளிக்கக் கூடியது.

இச் சட்டத்தால் அமைக்கப்படும் கிராமப் பஞ்சாயத்துக்கள் இதுவரை இருந்த பஞ்சாயத்துப் போர்டுகளைப் போன்றவை அல்ல. புதிய கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஏராளமான அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. கிராம வாசிகளுக்கு மிக அவசியமான விஷயங்களில் கிராமச் சுய ஆட்சியை நிலவச் செய்யும் நோக்கத்துடன் ஏற்படுத்தப் பட்டிருக்கும் இச் சட்டத்தின் முக்கிய அம்சங்களைக் கவனிப்போம்.

**இச்சட்டம் அமுலில் இருக்கும் இடங்கள்:**—சென்னை ராஜ்யத்தில், சென்னைமாநகர், முனிசிபல் பட்டணங்கள், கண்டோன்மெண்டுகள் இவைகளைத் தவிர, மற்ற எல்லா இடங்களிலும் இச்சட்டம் அமுலில் இருக்கும்.

**அமுலுக்கு வரும் தேதி:**—சட்டம் ஏற்பட்டு விட்டாலும், இது எந்தத்தேதி முதல் அமுலுக்கு வரும் என்று, சென்னை சர்க்காரால் நிர்ணயம் செய்யப்பட்டு கெஜட்டில் விளம்பரம் செய்யப்படும். அத்தேதி முதல்தான் இச் சட்டத்தின் ஷரத்துக்கள் அமுலுக்கு வரும்.

**பழைய பஞ்சாயத்துப் போர்டுகள்:**—இச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படும் தேதியில், பழைய சட்டப்படி அமைக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்துப் போர்டுகள் எல்லாம் இப்புதுச் சட்டப்படி தேர்ந்தெடுக்கப் பட்டு அமைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களாகவே பாவிக்கப்படும். இச்சட்டப்படிக்குள்ள எல்லா அதிகாரங்களையும் இவை செலுத்தலாம். ஆனால் இச்சட்டம் அமுலுக்கு வந்தவுடன் பழைய பஞ்சாயத்துப் போர்டுகளில் மெம்பராக இருக்கும் 'வில்லேஜ் ஹெட்மென்' என்ற கிராம பெரிய தனக்காரர் தம்முடைய அங்கத்தினர் பதவியை இழப்பார். பழைய தலைவர், (President) உப தலைவர் (Vice-president) இவர்களே இப்புதுச் சட்டத்தின்படி தலைவர்களாகவும், உப தலைவர்களாகவும் பாவிக்கப்பட்டு, வேலை செய்வார்கள். சர்க்காரால் நிர்ணயிக்கும் தேதி வரை

பழைய பஞ்சாயத்தார்களே பதவி வகித்து வருவார்கள். சர்க்கார் யாதொரு தேதியும் நிர்ணயம் செய்யாவிட்டால், பழய சட்டப்படி எவ்வளவு காலம் அவர்களுக்குப் பதவி இருந்திருக்குமோ அது வரை தான் இவர்கள் பதவியி லிருப்பார்கள். இவ்விதம் பழைய பஞ்சாயத்துப் போர்டுகள் இப்புதுச் சட்டப்படி வேலை செய்து கொண்டிருக்கும் போதே லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் இப்புதுச் சட்டப்படி தம் அதிகாரங்களைச் செலுத்தி, புதிய பஞ்சாயத்துக்களை ஸ்தாபித்தும், புதிய அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கவும் ஏற்பாடுகள் செய்வார். இனி இச்சட்டத்தின் மற்ற ஷரத்துகளை சில முக்கிய தலைப்புக்களின் கீழே கவனிப்போம்.

**பஞ்சாயத்துகளின் அமைப்பு:**—ஒவ்வொரு கிராமத்திற்கும் பஞ்சாயத்து அமைக்கப்படும். ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் சொத்துக்கள் வாங்கவும், பராதீனம் செய்யவும், ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவும், வழக்குகள் தொடரவும், அதன்மீது வழக்குத் தொடரப் படவும் சட்டபூர்வமாக உரிமை யுள்ளதாகவே பாவிக்கப்படும். ஜனத்தொகை 500க்கு குறையாமல் இருக்கும் ஒவ்வொரு ரெவின்யூ வட்டத்திற்கும் ஒரு பஞ்சாயத்து ஸ்தாபிக்கப்படும். ஜனத்தொகை 500க்குள் இருக்கும் பல ரெவின்யூ வட்டங்களைச் சேர்த்து (மேற்கண்ட ஜனத்தொகை இருக்கும்படி) அந்தக் கிராமங்களுக்கு ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தவும் ஒரு பஞ்சாயத்திலிருந்து ஜனத்தொகை 500-க்குமேல் இருக்கும் ஒரு கிராமத்தைப் பிரித்து அதற்கு ஒரு தனிப் பஞ்சாயத்து ஏற்படுத்தவும் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் உண்டு. ஜனத்தொகை 5000-க்குக் குறையாமல் இருக்கும் பஞ்சாயத்துக்கள் முதல் வகுப்புப் பஞ்சாயத்து எனப்படும். மற்றவை இரண்டாவது வகுப்புப் பஞ்சாயத்துக்கள். ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் எவ்வளவு அங்கத்தினர்கள் (members) என்று இன்ஸ்பெக்டர் ஜனத்தொகையை ஆதாரமாகக் கொண்டு தீர்மானிப்பார். இதை மாற்றவும் அவருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் ஒரு பஞ்சாயத்துக்குக் குறைந்தது 5 அங்கத்தினர்களாவது இருக்கவேண்டும்; எந்தப் பஞ்சாயத்துக்கும் 15-க்குமேல் அங்கத்தினர்கள் தொகை இருக்காது.

**மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.**

ஒவ்வொரு பஞ்சாயத்துக்கிராமமும் பல வார்டுகளாக இன்ஸ்பெக்டரால் பிரிக்கப்படும். முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்களில் குறைந்தது 5-வார்டுகளாவது இருக்கும்; மற்றப் பஞ்சாயத்துக்களில் ஜனத்தொகை 1000-க்குள் இருக்கும் கிராமங்கள் இரண்டு வார்டுகளாகவும் அதற்கு மேல் ஜனத்தொகை இருந்தால் 5-வார்டுகளுக்கு மேல் போகாமலும் பிரிக்கப்படும். ஒவ்வொரு 'வார்டு'ம் எவ்வளவு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் இன்ஸ்பெக்டரால் தீர்மானிக்கப்படும். மேலும் ஜாப்தாவில் கண்ட ஜாதியினருக்கு (Scheduled Castes) அவர்களின் ஜனத்தொகைக்கு ஒத்தவாறு சில ஸ்தானங்களையும் இன்ஸ்பெக்டர் ஒதுக்கலாம். மற்ற ஸ்தானங்களுக்கும் ஷெடியூல் வகுப்பினர் போட்டியிடலாம்.

**வாக்காளர்கள்:**—ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு வாக்காளர் ஜாப்தா (Electoral roll) தயார் செய்து பிரசுரம் செய்யப்படும். அந்த ஜாப்தாவில் பெயர் இருப்பவர்கள்தான் பஞ்சாயத்து அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க வாக்கு (Vote) கொடுக்கலாம். சென்னை கீழ்ச் சட்ட சபைக்கு 'வோட்' கொடுக்கக் கூடியவர்கள் அந்தப் பஞ்சாயத்து எல்லைக்குள் யார் யார் இருக்கிறார்களோ அவர்கள் எல்லோரும் அந்தப் பஞ்சாயத்து வாக்காளர் ஜாப்தாவில் இருக்க உரிமை உடையவர்கள். அதாவது பொதுவாக 21-வயது பூர்த்தியான எவருக்கும் 'ஓட்' உரிமை உண்டென்று சொல்லாம். ஆனால் அந்தப் பஞ்சாயத்து வாக்காளர் ஜாப்தாவில் பெயர் இருப்பவர்கள்தான் அந்த வார்டு தேர்தலில் 'ஓட்' செய்யலாம். அவர்கள்தான் அந்தப் பஞ்சாயத்தில் அங்கத்தினராக (members) இருக்கவும் போட்டியிடலாம். வாக்காளர் ஜாப்தாவில் பெயர் இல்லாத எவரும் பஞ்சாயத்து 'மெம்பர்' ஆகவும் முடியாது; தேர்தலில் 'ஓட்' கொடுக்கவும் முடியாது.

## கிராம உத்தியோகஸ்தர்கள் முதலியவர்கள் பஞ்சாயத்து அங்கத்தினர்களாக முடியாது

கிராமப் பெரிய தனக்காரர் (Village Headman) கர்ணம், கிராமச் சிப்பந்திகள், சர்க்கார், பஞ்சாயத்து, ஜில்லா போர்டு, முனிசிபாலிடி, சென்னை கார்பரேஷன் இவைகளில் உத்தியோகத்திலிருப்பவர்கள்— இவர்கள் ஒருவரும் பஞ்சாயத்து அங்கத்தினராக (மெம்பர்) இருக்க முடியாது.

## கீழ்க்கண்டவர்களும் பஞ்சாயத்தின் அங்கத்தினராக இருக்க முடியாது.

(1) தேர்தல் சம்பந்தமான குற்றத்திற்குத் தண்டனை அடைந்தவர்—(தண்டனை அடைந்த தேதியிலிருந்து 5-வருடம் அல்லது கோர்ட்டால் குறிப்பிடப்படும் வருஷம் வரை இவர்களுக்கு யோக்கியதை கிடையாது. இவர்கள் 'ஓட்' கூடச் செய்ய முடியாது. இதைச் சர்க்கார் ரத்து செய்ய முடியும்.)

(2) தேர்தல் அல்லது நாமினேஷன் காலத்தில் சித்த சுவாதீனம் இல்லாதவர், ஊமை செவிடு, குஷ்டரோகி.

(3) கடன் கொடுக்கச் சக்தியற்ற இன்சால்வெண்ட் என்று நிர்ணயிக்கப்பட்டவர், அல்லது தாமே இன்சால்வெண்ட் மனுக் கொடுத்தவர்.

(4) பஞ்சாயத்துடன் வேலைகள் செய்ய ஒப்பந்தம் (காண்ட்ராக்ட்) உள்ளவர்.

(5) பஞ்சாயத்தின் வக்கீல்; அல்லது பஞ்சாயத்திற்கு எதிர்க்கக்ஷி வக்கீல்.

(6) அந்தப் பஞ்சாயத்து எல்லைக்குள் அதிகாரமுள்ள கௌரவ மாஜிஸ்ட்ரேட்.

(7) ஏற்கனவே பஞ்சாயத்து மெம்பராக இருப்பவர்.

(8) ஒரு பஞ்சாயத்து மெம்பரின் சிப்பந்தி அல்லது எஜமானர்.

(9) பஞ்சாயத்துக்கு எவ்வித பாக்கித்தொகையும் (நோட்டீசில் கண்ட கெடுவுக்குள்) கொடுக்காமல் பாக்கி வைத்திருப்பவர்கள்.

இவர்கள் பஞ்சாயத்து மெம்பர்களாகத் தேர்தலில் போட்டியிட முடியாது.

## 'மெம்பர்'களும் பதவியை இழப்பார்கள்.

மேற்கண்ட காரணங்கள் ஒருவர் பஞ்சாயத்து மெம்பர் ஆன பிறகு தோன்றினாலும் அவர் உடனே 'மெம்பர்' ஸ்தானத்தை இழந்து விடுவார். மேலும் (1) பஞ்சாயத்தின் சிப்பந்தியானாலும் (2) கிராமத்தில் வசிக்காமலிருந்தாலும் (3) மூன்று மாதம் அல்லது மூன்று மீட்டிங்குகளுக்குத் தொடர்ச்சியாய்ப் பஞ்சாயத்துக் கூட்டத்திற்கு (மீட்டிங்) வராமலிருந்தாலும் ஒரு மெம்பர் பதவி இழப்பார். மேலும் எந்த மெம்பரையும் அவருடைய பதவியை விட்டுச் சில காரணங்களை முன்னிட்டு நீக்க இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு. சக்தியின்மை, அசட்டை, துர்நடத்தை இக்காரணங்களைக் கொண்டும் நீக்கலாம்.

**தலைவர் (President)** :— ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு தலைவரும் (பிரசிடெண்ட்) ஒரு உபதலைவரும் உண்டு. தலைவர் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். மூன்று வருடம் பதவி வகிப்பார். தலைவரும் பஞ்சாயத்தின் ஒரு அங்கத்தினராகவே இருப்பார். உபதலைவர் பஞ்சாயத்து மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்படுவோர்.

**நிர்வாக உத்தியோகஸ்தர் (Executive officer)** :—சில பஞ்சாயத்துக்களுக்கு, சர்க்கார் நிர்வாக உத்தியோகஸ்தர்களை நியமிக்கலாம். நிர்வாக உத்தியோகஸ்தர் நியமிக்கப் படாத பஞ்சாயத்துக்களுக்குத் தலைவரே நிர்வாக உத்தியோகஸ்தருடைய அதிகாரங்களைச் செலுத்துவார். நிர்வாக உத்தியோகஸ்தருக்குச் சம்பளம் உண்டு. பஞ்சாயத்துத்தான் அதைக்கொடுக்க வேண்டும். நிர்வாக உத்தியோகஸ்தர் பஞ்சாயத்து மீட்டிங்குகளுக்குப் போய் பங்கு எடுத்துக் கொள்ளலாம். ஆனால் 'ஓட்' செய்யமுடியாது. இவர் பஞ்சாயத்தால் செய்யும் தீர்மானங்களை நடைமுறையில் நிறை வேற்றி வைப்பார் பஞ்சாயத்தின் சிப்பந்திகளும் இவருக்குட் பட்டவர்களே.

## பஞ்சாயத்தின் கடமைகள்.

கீழ்க்கண்ட விஷயங்களில் ஒவ்வொரு பஞ்சாயத்தும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, பணம் இருக்கும் வரை, இச்சட்டத்தை அனுசரித்து தகுந்த ஏற்

பாடுகள் செய்வது அதன் அதன் கடமையாகும். அவையாவன :—(1) ஜில்லா ரஸ்தாக்களையும் பெரிய தேசிய ரஸ்தாக்களையும் தவிர, கிராமத்திலிருக்கிற மற்றப் பொதுப் பாட்டைகளையும், பாலங்களையும், அணைகளையும், பாதைகளையும் ஏற்படுத்தி, பராமரித்து வருவது. (2) பொது பாட்டைகளிலும் பொது இடங்களிலும் விளக்குப் போடுவது. (3) சாக்கடைத் தண்ணீரை அகற்ற ஜலதாரைகள் ஏற்படுத்துவது. (4) தெருக்களைச் சுத்தம் செய்வது; சப்பாத்தி, கள்ளி முதலியவைகளை அகற்றுவது; உபயோகப்படாத கிணறுகளையும் சுகாதாரக் கெடுதி உண்டாக்கும் குட்டை குழிகள் பள்ளங்கள் இவைகளையும் மூடுவது (5) பொதுக் கக்கூசுகள் ஏற்படுத்துவது; சொந்தக் கக்கூசுகளையும் பொதுக் கக்கூசுகளையும் சுத்தம் செய்ய ஏற்பாடு செய்வது (6) சுடுகாடு புதைபூமி இவைகளைப் பராமரிப்பது (7) கிணறு கட்டுவது, குளிப்பதற்கும் துணி தோய்க்கவும் குளம் முதலிய ஏற்படுத்துவது (8) பெருவாரியாக வியாதிகள் பரவுவதையும் மலேரியா சுரம் பரவுவதையும் தடுக்கவும் சொஸ்தப் படுத்தவும் ஏற்பாடு செய்வது - இவைகளைக் கவனிப்பது ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் முதல் கடமையாகும்

## பஞ்சாயத்து இஷ்டப்பட்டால் கீழ்க் கண்டவைகளையும் செய்யலாம்.

(1) பாட்டைகளின் ஓரங்களில் மரம் நடுவது, பாதுகாப்பது (2) பொது மார்க்கெட் ஏற்படுத்துவது. (3) சந்தைகள் உற்சவங்கள் இவைகளை மேல் பார்வையிடுவது (4) வண்டிகள் நிற்குமிடம் பொது மாட்டுக் கொட்டில்கள் தங்குமிடம் இவைகளை ஏற்படுத்துவது (5) ஆடுமாடு அடிக்கும் தொட்டிகளை (Slaughter House) ஏற்படுத்துவது (6) சத்திரங்கள் ஸ்தாபிப்பது (7) கிராம நத்தத்தை விஸ்தரித்துக் கட்டடம் கட்டுவதை ஒழுங்கு படுத்துவது (8) ஜனன மரணங்கள் பதிவு செய்வது (9) விவசாய அபிவிருத்தி செய்வது; கால்நடை அபிவிருத்தி; விவசாயக் கண்காட்சிகள் நடத்துவது (10) குடிசைத் தொழில்களை விருத்தி செய்வதை ஆதரிப்பது (11) ஆரம்பப் பாடசாலைகள் ஏற்படுத்துவது. (12) வாசகசாலைகள் ஏற்படுத்துவது (13) ரேடியோ வைப்பது; விளையாட்டு மைதானங்கள் தேகப்பயிற்சி இடங்கள் ஏற்படுத்துவது (14) வைத்திய சாலைகள் ஸ்தாபிப்பது (15) பிரசவ சிசு சம்ரக்ஷண சாலைகள் ஸ்தாபிப்பது (16) மிருக வைத்தியம் அளிப்பது (17) கிராமவாசிகளின் க்ஷேமத்தையும் ஆரோக்கியத்தையும் சௌகரியத்தையும் விருத்தி செய்யக் கூடிய இதர ஏற்பாடுகள் செய்வது.

இவ்விஷயங்களில் கட்டாயமொன்றுமில்லாவிட்டாலும், பஞ்சாயத்துக்கள் இதற்காக ஏற்பாடு செய்வதை இச்சட்டம் அனுமதிக்கின்றது

## பஞ்சாயத்துக் கோர்ட்டும் இதுவே

இதுவரை பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் வேறு; பஞ்சாயத்துப் போர்டுகள் வேறாக இருந்து வருகின்றன. பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படுத்தப்படாத கிராமங்களில் கிராம முன்சீப் என்பவர் கிராமப் பெரிய தனக்காரரேதான். இப்புது சட்டப்படி ஸ்தாபிக்கப்படும் பஞ்சாயத்துக்களே இனி கிராமக் கோர்ட்டுகள். கிராமக் கோர்ட் சட்டப்படிக்குள்ள சிவில் கிரிமினல் அதிகாரங்களையெல்லாம் கிராமப் பஞ்சாயத்தே செலுத்தும். இச்சட்டம் அமுலுக்கு வந்தவுடன் பழைய பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் மறைந்து விடும். வில்லேஜ் கோர்ட் சட்டப்படிக்குள்ள அதிகாரங்களைத்தவிர எந்தப் பஞ்சாயத்தும் எவ்விதமான சிவில் கிரிமினல் அதிகாரங்களையும் செலுத்தும்படி சர்க்கார் அதிகாரம் அளிக்கலாம்.

## பத்திரங்களை ரிஜிஸ்டர் செய்யும் அதிகாரம்

சப்ரிஜிஸ்டிரார் ஆபீஸ் அந்தப் பஞ்சாயத்து எல்லைக்குள் இல்லாத எந்தப் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரிக்கும், சில பத்திரங்களை சப்ரிஜிஸ்டிராரைப் போல் பதிவு (ரிஜிஸ்டர்) செய்ய அதிகாரம் கொடுக்கலாம். இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் ரிஜிஸ்ட்ரேஷன் என்ற தலைமை அதிகாரியால் கீழ்க்கண்ட பத்திரங்களை ஒரு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியே 'ரிஜிஸ்டர்' செய்யலாமென்று அதிகாரமளிக்கலாம். அதாவது:— (1) ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணம் தேவையில்லாத பத்திரங்கள் (2) இச்சட்டத்தின் கீழ் ஏற்படும் விதிகளின்படி அதிக முக்கிய

மில்லாதவை என்று குறிப்பிடப்படும் தஸ்தவேஜுகள் இவைகளைப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியே பதிவு (ரிஜிஸ்டர்) செய்யலாம்.

## வரி விதிக்கும் அதிகாரம்.

ஒவ்வொரு பஞ்சாயத்தும் (1) வீட்டு வரி (2) தொழில் வரி (3) வண்டி வரி இவைகளை விதிக்கலாம். (4) தவிர ஒரு பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கும் ஸ்தாவர சொத்துக்களைக் குறித்த கிரயம், பரிவர்த்தனை, தானசாசனம், ஒத்தி, சாசுவத குத்தகை இப்பத்திரங்களுக்கு சொத்தின் மதிப்புக்கு ரூ. 100க்கு ரூ. 5க்கு மேற்படாமல் சர்க்காரால் நிர்ணயிக்கப்படும் 'ஸர் சார்ஜ்' என்ற கட்டணமும் பஞ்சாயத்தைச் சேரும். இன்ஸ்பெக்டரின் அங்கீகாரத்தின் பேரில் விதிகளை அனுசரித்து: (5) கட்டடங்களைத் தவிர மற்ற நிலங்களின் வருடக் குத்தகை மதிப்பின்மீது ரூபாய் ஒன்றுக்குக் காலணு செஸ் விதிக்கலாம். (6) குறிப்பிட்ட ஒரு காரியத்திற்காக விவசாய நிலத்தின் மீது ஒரு வரி விதிக்கலாம் (7) கிராமத்தில் விற்று வாங்கப்படும் சில வியாபார விளைபொருள்களுக்கு ஒரு கட்டணம், விதிக்கலாம். ஒவ்வொரு வகை வரிகளும் எப்படி விதிக்கப்பட வேண்டுமென்று பல ஷரத்துக்கள் இருக்கின்றன. இவற்றைத் தவிர இன்னும் பல வகைகளில் பஞ்சாயத்துக்குப் பணம் சேரும். அவையாவன:—(8) இப்பொழுது ஜில்லா போர்டு சட்டப்படி வசூல் செய்யப்படும் செஸ்ஸில் காலில் ஒரு பங்கு அந்த அந்தப் பஞ்சாயத்திக்குக் கொடுக்கப்படும் (9) அந்தக் கிராமத்தில் வசூல் செய்யப்படும் யாத்திரைக்காரர்கள் வரி (10) வியாபார விளைபொருள் சட்டப்படி அமைக்கப்படும் மார்க்கெட் கமிட்டியால் ஒரு பஞ்சாயத்துக்குத் தொகை கொடுக்கப்படலாம் (11) சென்னை சுகாதாரச் சட்டப்படி அந்தக் கிராமத்தில் வசூல் செய்யப்படும் வரிகள் (12) ஜில்லா போர்டு நிர்வாகம் செய்யும் சந்தை அல்லது பரிசலுக்காக அந்தக் கிராமத்திற்குக் கொடுக்க வேண்டியதாய், சர்க்காரால் நிர்ணயம் செய்யப்படும் தொகை (13) பள்ளிக்கூடங்களுக்காக ஜில்லா போர்டால் கொடுக்கப்படும் தொகைகள் (14) பஞ்சாயத்தின் நிர்வாகத்தின் கீழ் விடப்பட்ட தர்ம சொத்துக்களின் வருமானம் (15) மீன் குத்தகையின் வருமானம் (16) பஞ்சாயத்தால் நிர்வாகம் செய்யப்படும் பரிசல்களின் வருமானம் (17) பஞ்சாயத்துக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களின் வருமானம் (18) புறம்போக்கில் உள்ள மரங்களின் வரும்படி (19) இச்சட்டத்தை மீறியதாக ஒருவர் மாஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப்பட்டு அபராதம் செலுத்தினுல் அதில் 10ல் 9 பங்கு பஞ்சாயத்தைச் சேரும் (20) சர்க்காரிடமிருந்து கிடைக்கும் கிராண்டுத் தொகை (21) இவற்றைத் தவிர இரண்டாவது வகுப்புப் பஞ்சாயத்துக்களுக்கு மட்டில் ஒரு முக்கிய வருமானமும் உண்டு. சென்னை ராஜ்யத்தில் வசூலாகும் நில வரி (செஸ் உள்பட)மொத்தத்தொகையில் 100க்கு 12½ வீதம் உள்ள பணத்திற்குக் குறையாமல் இந்த இரண்டாவது வகுப்புப் பஞ்சாயத்துக்களுக்கு, ஜனத்தொகையின் வீதாசாரப்படி, பிரித்துச் சர்க்காரால் கொடுக்கப்படும். இன்னும் சில வகைகளிலும் பஞ்சாயத்துக்களுக்கு இச் சட்டப்படி வருமானம் வரும்.

மேல் விசாரணை:—இச் சட்டப்படி அமைக்கப்படும் பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்தை மேற் பார்வை பார்க்க ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டருக்கு ஏராளமான அதிகாரங்கள் இச்சட்டத்தால் கொடுக்கப்பட் டிருக்கின்றன. அவருக்கு உதவி செய்ய பிரதேச இன்ஸ்பெக்டர்களும் சர்க்காரால் நியமிக்கப்படலாம். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர் என்ற அதிகாரியும், டிப்டி பஞ்சாயத்து ஆபீசர் என்ற உதவி உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்படுவார்கள். ஜில்லா கலெக்டர்களுக்கும் ஏராள அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தை அனுசரித்துச் சர்க்காரால் பல விஷயங்களைக் குறித்து விவரமாய் விதிகள் செய்யப்படும்.

[குறிப்பு:—சென்னை சட்ட மன்றத்தால் நிறை வேற்றப்பட்ட பெரிய சட்டங்களில் இந்தப் பஞ்சாயத்துச் சட்டம் ஒன்று. இதன் முக்கிய அம்சங்களை மட்டில் மேலே கவனித்

தோம். இனி வரும் "வக்கீல்" இதழ்களில் இச்சட்டத்தின் ஒவ்வொரு முக்கிய அம்சமும் விவரமாய் விளக்கம் செய்யப்படும். மேலும் சர்க்காரால் இச்சட்டத்தை அமுல் நடத்த ஏற்படுத்தப்படும் விதிகளையும் நேயர்கள் அவ்வப்பொழுது "வக்கீல்" மூலம் தெரிந்து கொள்ளலாம்.]

# தொழில் தகராறுகள்-அப்பீல் கோர்ட் - சட்டம்

[The Industrial Disputes—Appeal Tribunal Act 1950.—1950 ஆம் வருஷத்திய 48 ஆவது (மத்திய) சட்டம். 20-5-1950ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. காஷ்மீர் தவிர அகில இந்தியாவிலும் அமுலில் இருக்கும்.]

தொழிற்சாலைகளிலும் மற்ற ஸ்தாபனங்களிலும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும், அவைகளின் முதலாளிகளுக்கும் இடையே ஏற்படும் பலவகைப்பட்ட சச்சரவுகளையும் தகராறுகளையும் தீர்க்கச் சில சட்டங்கள் இருக்கின்றன. இவைகளில் முக்கியமானது 1947 ஆம் வருஷத்திய தொழிற் தகராறுகள் சட்டம் (The Industrial Disputes Act 1947) என்ற மத்திய சட்டம். இச் சட்டப்படி எந்த இடத்தில் தொழில் தகராறுகள் ஏற்பட்டாலும் அது சம்பந்தப்பட்ட சர்க்கார், (அதாவது ரயில்வே, சுரங்கம், முதலியவை போன்ற தொழில்களில் மத்திய சர்க்காரும், மற்றத் தொழில்களில் அந்தந்த ராஜ்ய (மாகாண) சர்க்காரும்) அப்படி ஏற்படும் தகராறுகளையும் சண்டைகளையும் தீர்த்துவைக்கச் சில முறைகளைக் கையாளலாம். முதலில், எந்தத் தொழிற்சாலையில் தகராறுகள் ஏற்படுகின்றதோ அதன் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே சமாதானம் ஏற்படுத்த சமாதான உத்தியோகஸ்தர்களை (Conciliation officer; conciliation Boards) நியமிக்கலாம். கொஞ்சம் சச்சரவு பரவினால் விசாரணைக் கோர்ட்டுகளை (Courts of Inquiry) நியமித்து, தகராறுகள் ஏற்படும் காரணம் என்ன என்று விசாரணை செய்யும்படி உத்தரவிடச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. குறிப்பிட்ட தகராறுகளை முடிவாகத் தீர்க்க 'தொழில் டிரிபுனல்' (Industrial Tribunal) என்ற விசேஷ நீதிஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த டிரிபுனல்கள் ஒரு வகை நீதிஸ்தலங்களே யாகும். வழக்கை விசாரித்து முடிவு செய்வார்கள். இவர்களின் முடிவுக்கு, 'தீர்மானம்' அல்லது 'தீர்ப்பு' (Award) என்று சொல்வது. இத்தீர்மானங்களைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டு உறுதிசெய்யப்பட்டால்தான் அமுலுக்கு வரும்.

இந்த 'டிரிபுனல்' என்ற விசேஷ நீதிஸ்தலங்களின் தீர்ப்புகளின் பேரில், சம்பந்தப்பட்ட தொழிலாளர்களோ முதலாளிகளோ, அப்பீல் செய்ய வசதி அளித்து ஒரு புதிய சட்டம் ஏற்பட்டிருக்கிறது. இதுதான் 1950 ஆம் வருஷத்திய 48 ஆவது மத்திய சட்டம்.

இச்சட்டப்படி அகில இந்தியாவிற்கும் ஒரு 'தொழில் அப்பீல் டிரிபுனல்' (Labour Appellate Tribunal) என்ற ஒரு விசேஷ உயர் நீதிஸ்தலம் ஸ்தாபிக்கப்படும். இதில் ஹைகோர்ட் நீதிபதிகள் அல்லது அதே அந்தஸ்து உள்ளவர்கள் தான் நீதிபதிகளாக இருப்பார்கள். இந்தியாவில் உள்ள எந்தத் தொழில் டிரிபுனல்களின் தீர்ப்பின் பேரிலும் (Award) புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்தத் தொழில் அப்பீல் டிரிபுனலுக்கு, சம்பந்தப்பட்டவர் அப்பீல் செய்யலாம். ஆனால் சில முக்கிய விஷயங்களைப் பற்றித்தான் அப்பீல் செய்யமுடியும். ஏதாவது சிக்கலான சட்டப் பிரச்னைகளைத் தீர்க்கவேண்டியிருந்தாலும்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நிலையம்
187699
சென்னை-600 008

அல்லது சம்பளம், போனஸ், பிரயாணச் செலவு, பென்ஷன், பிராவிடெண்ட் பண்ட் நிதி, விசேஷ வேலைகளுக்கான தனி ஊதியம், வேலையை விடும்போது கொடுக்கப்படும் வெகுமானம், வேலை செய்பவர்களைத் தரம் பிரிப்பது, வேலையிலிருந்து எடுப்பது முதலிய விஷயங்களைப்பற்றி முடிவுக்கு வரவேண்டியிருந்தாலும்தான் அப்பீல் செய்ய முடியும். சம்மதத்தின் பேரில் ஏற்பட்ட தீர்ப்பின் பேரில் அப்பீல் கிடையாது. டிரிபுனல்களின் தீர்ப்பு ஏற்பட்டு 30 தினங்களுக்குள் அல்லது அவைகள் பிரசுரமாகி 30 தினங்களுக்குள் அப்பீல் செய்யவேண்டும். அப்பீல் டிரிபுனல்களின்முன் மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் ஆஜராகி நடவடிக்கைகளில் கலந்து கொள்ள உரிமை உண்டு. அப்பீல் முடியும் வரை தீர்ப்புகளை நிறைவேற்ருமல் நிறுத்தி (Stay) வைக்க அப்பீல் டிரிபுனலுக்கு அதிகாரமுண்டு. அப்பீல் டிரிபுனலின் தீர்மானம் ஏற்பட்டு 30 தினங்களுக்குப் பின்தான் அமுலுக்கு வரும். ஆனல் அதற்குள் பொது நலத்தை உத்தேசித்து அப்பீல் டிரிபுனலின் தீர்மானத்தை மாற்றவும் நிராகரிக்கவும் அந்த அந்தச் சர்க்கார்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் மத்திய சர்க்கார் செய்தால், அவ்விஷயத்தைப் பார்லிமெண்டுக்கும் ஒரு ராஜ்ய சர்க்கார் செய்தால் அதை ராஜ்ய சட்ட சபைக்கும் உடனே தெரிவித்துவிட வேண்டும். அப்பீல் நடக்கும்போது தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதும் (Strike) முதலாளி வேலை கிடையாது (Lock out) என்று சொல்வதும் குற்றமாகும். இவ்விதம் செய்யத் தூண்டுவதும் குற்றமாகும். தண்டனை உண்டு.

இச்சட்டத்தால் ஏற்படும் மற்ற மாறுதல்கள் :—1947 ஆம் வருடத்திய தொழில் தகராறுகள் சட்டம் காஷ்மீர் ராஜ்யம் தவிர மற்ற அகில இந்தியாவிற்கும் இப்பொழுது அமுலுக்குக் கொண்டுவரப் பட்டிருககிறது. சர்க்கார்களால் ஏற்படுத்தப்படும் தொழில் டிரிபுனல்களின் தீர்ப்புக்கள் சர்க்காரால் உறுதி செய்யப்பட்ட பிறகுதான் அமுலுக்கு வரும் என்று முன் விதியிருந்தது. இது இப்பொழுது மாற்றப்பட்டிருக்கிறது. அதாவது டிரிபுனல்களின் தீர்ப்புகள் பிரசுரம் செய்யப்பட்ட 30 தினங்கள் சென்ற பிறகு தாமாகவே அமுலுக்கு வந்துவிடும். ஆனல் அதற்குள் சம்பந்தப்பட்ட சர்க்கார்கள் ஒரு பொதுக் காரணத்தால் அத்தீர்ப்புக்களை நிராகரிக்கவும் மாற்றவும் அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கின்றனர். இப்படிச் செய்தால் உடனே பார்லிமெண்ட் அல்லது சட்ட சபைக்குத் தெரிவிக்க வேண்டும். சமரசம் அல்லது விசாரணை நடந்து கொண்டிருக்கும்போதும் தொழிலாளர்களை நீக்குவது போன்ற நடவடிக்கைகளை முதலாளிகள் எடுத்துக்கொள்ளக் கூடாது.

மேலும் தொழில் டிரிபுனல்களின் தீர்ப்புகளின்படி ஒரு தொழிலாளருக்குக் கிடைக்க வேண்டிய சம்பளம், முதலிய எவ்வகைத் தொகைகளையும் முதலாளியிடமிருந்து வசூல் செய்து தரவேண்டுமென்று சர்க்காருக்கு மனுச் செய்தால் அவர்கள் கிஸ்தி வசூல் செய்வது போல் இத்தொகைகளையும் வசூல் செய்து தொழிலாளரிடம் கொடுக்க இச்சட்டம் வசதி அளிக்கின்றது.

[குறிப்பு :—இச் சட்டத்தை அனுசரித்து மத்திய சர்க்காரால் செய்யப்பட்டிருக்கும் விதிகள் 8-8-1950 தேதியுள்ள விசேஷ இந்தியா கெஜட் பாகம் I, செக்ஷன் I, பக்கம் 511ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன.]




இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

## பல தாரத் தடைச்சட்ட வழக்கு. இரண்டாவது மணம் சென்னை ராஜ்யத்திற்கு வெளியே நடந்தால்?

**கோர்ட்:** சென்னை ஹைகோர்ட்

**நீதிபதி:** கனம் நீதிபதி சந்திரா ரெட்டி அவர்கள்.

**ஆதாரம்:** 1950 (1) மதராஸ் லா ஜர்னல்—171.

சென்னை-பல தாரத் தடைச்சட்டத்தால் எற்படும் ஒரு பிரச்னை இவ்வழக்கில் தீர்க்கப்பட்டது. ஆனால் அது வழக்கு முறையைப் பற்றிய பிரச்னைதான்.

சென்னை-பல தாரத் தடைச்சட்டம் என்பது 1949 ஆம் வருஷத்திய 6-ஆவது சட்டம். இச்சட்டம் சென்னை சட்டசபையால் நிறைவேற்றப்பட்டுச் சட்டமானது. சென்னை ராஜ்யத்தில் மட்டில்தான் அமுலில் உள்ளது. இச்சட்டப்படி சென்னை ராஜ்யத்தைச் சேர்ந்த ஒரு ஹிந்து, தம்முடைய மனைவி உயிருடன் இருக்கும் போது, வேறு மணம் செய்து கொள்வது செல்லாது; குற்றமுமாகும். முதல் மனைவி சம்பந்தப்பட்ட வரையில் கோர்ட் மூலம் 'விவாக ரத்து' (divorce) செய்துகொண்ட பிறகுதான் ஒருவர் வேறு கலியாணம் செய்து கொள்ளலாம். முதல் மனைவியுடன் விவாக ரத்து செய்து கொள்ளாமல் அவள் உயிருடன் இருக்கும் போதே வேறு மணம் செய்து கொள்ளும் குற்றத்திற்கு இந்தியன் பினல்கோடு செக்ஷன் 494படி 7-வருஷம் வரை சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படலாம். 18-வயது பூர்த்தியாகாதவருக்கு இப்படிச் சட்டவிரோதமான கலியாணம் நடந்தால், அதைச் செய்து வைத்தாலும், அனுமதித்தாலும் தெரிந்து தடுக்காமலிருந்தாலும், பெற்றோர்களுக்கும் கார்டியன்களுக்கும் 6-மாதச் சிறைத் தண்டனை கொடுக்கலாம். கலியாணத்தை நடத்திவைக்க உதவி செய்வோருக்கும் 6-மாதத் தண்டனை உண்டு.

**இவ்வழக்கின் விவரம்:**—புஷ்கலம்மாள் என்பவள் திருச்சி வாசியாகிய தன் கணவன் வெங்கடராமன் 30-6-1949-ல் திருவனந்தபுரத்தில் மறுமணம் செய்துகொண்டு விட்டார் என்று அவர்மீது திருச்சிராப்பள்ளி அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் முன் ஒரு கிரிமினல் வழக்குக் கொடுத்தாள். முதல் எதிரி அவளுடைய கணவன். இரண்டாவது எதிரி அவள் புருடனுடைய சிற்றப்பன். மூன்றாவது எதிரி அச் சிற்றப்பனின் மனைவி. நான்காவது எதிரி தம் புருஷன் திருவனந்தபுரத்தில் மணம்செய்து கொண்ட இரண்டாவது மனைவி. முதல் எதிரியும் நான்காவது எதிரியும் பல தாரத் தடைச் சட்டப்படி குற்றம் செய்தார்கள் என்றும், அவ்விதம் செய்யும்படி இரண்டு, மூன்று எதிரிகள் தூண்டி உடந்தையாக இருந்தார்கள் என்றும் பிராதில் சொல்லப்பட்டது.

திருச்சி கோர்ட்டுக்கு இவ்வழக்கை எடுத்துக் கொள்ள அதிகாரமில்லை என்று எதிரிகள் ஒரு பூர்வாங்க ஆட்சேபனை செய்தார்கள். மறுமணம் செய்து கொள்வதுதான் குற்றம். மறுமணம்

நடந்தது சென்னை ராஜ்யத்தில் இல்லை. அதற்கு அப்பால் உள்ள திருவாங்கூர் ராஜ்யத்தைச் சேர்ந்த திருவனந்தபுரத்தில் நடந்த இக்குற்றத்தைப்பற்றி விசாரிக்கத் திருச்சி மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரமில்லை என்று ஆட்சேபித்தனர்.

இந்த ஆட்சேபனையை திருச்சி மாஜிஸ்ட்ரேட் ஒப்புக் கொள்ளவில்லை. வழக்கை மேல் நடத்தக் கூடாதென்று எதிரிகள் ஹைகோர்ட்டுக்கு மனுச்செய்து கொண்டனர்.

ஹைகோர்ட்டில் உயர் நீதிபதி கனம் சந்திரா ரெட்டி அவர்கள் இந்த ஆட்சேபனை சரி என்று ஏற்றுக்கொண்டனர். இந்தச் சட்டத்தில் குற்றத்தை எங்கு விசாரணை செய்யவேண்டுமென்று கூறப்படாததால் கிரிமினல் புரொஸீஜர் கோட் என்ற குற்றங்களைப் பற்றிய வழக்கு முறைச் சட்டத்தின் 177-ஆவது செக்ஷன்படி எந்த இடத்தில் ஒரு குற்றம் நடந்ததோ அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள கோர்ட்டுதான் அதைச் சாதாரணமாய் விசாரிக்கலாம் என்று இருப்பதால், திருவனந்தபுரத்தில் முதல் எதிரியும் நான்காவது எதிரியும் செய்த குற்றத்தைத் திருச்சி மாஜிஸ்ட்ரேட் விசாரிக்க அதிகாரமில்லை என்று அவர்கள் மீது நடந்த வழக்கை மேல் நடத்தக் கூடாதென்று நீதிபதி அவர்கள் அதை ரத்து (quash) செய்தனர். ஆனால் குற்றம் செய்யத் தூண்டிய சிற்றப்பனும் சிற்றன்னையும், அதாவது இரண்டாவது மூன்றாவது எதிரிகள் சம்பந்தப்பட்ட வரையில் அவர்கள் எந்த இடத்தில் எவ்விதம் இப்படித் தூண்டினார்கள் என்று இதுவரையில் வழக்கில் யாதொரு ருசுவும் இல்லாதிருப்பதால் அவர்கள்மீது மட்டில் வழக்கை மேல்நடத்தலா மென்றும் உத்தரவு செய்யப்பட்டது.

குறிப்பு:—ஆனால் இவ்வழக்கில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் சில உண்டு. சென்னைச் சட்டப்படி சென்னை ராஜ்யத்திலிருப்பவர் இச்சட்டத்திற்கு விரோதமாய் இரண்டாவது மணம் எங்கே செய்து கொண்டாலும் அது செல்லாது. அதாவது அவர் சென்னை ராஜ்யத்திற்குள் மறுமணம் செய்து கொண்டாலும் அதற்கு அப்பால் போய் மறுமணம் செய்து கொண்டாலும் அது செல்லாது.

இரண்டாவது மணம்செய்து கொள்ளப்பட்ட ஸ்திரீ—'மனைவி' என்ற அந்தஸ்துடையவள் ஆகமாட்டாள்.

**இரண்டாவது விஷயம்:**—இந்தியாவிற்கு வெளியே ஒரு குற்றம் நடந்தால் குற்றம் நடக்கும் இடத்திலுள்ள இந்தியப் பிரதிநிதி (Political Agent) அக்குற்றத்தை இந்தியாவிலேயே விசாரிக்க வேண்டுமென்று சிபார்சு செய்தால் (Certify) அதை விசாரிக்க இந்தியக் கோர்ட்டுகளுக்கு அதிகாரமுண்டு என்று கிரிமினல் ப்ரொஸீஜர் கோடு 188-ஆவது செக்ஷனில் இருக்கிறது. அவ்விதம் இவ் வழக்கில் யாதொரு சர்டிபிகேட்டும் தாகல் செய்யப்படவில்லை என்று தீர்ப்பில் கண்டிருக்கிறது. அப்படித் தாகல் செய்தாலும் அது இப்பொழுது இருக்கும் அரசியல் அமைப்பில் இவ்வித வழக்குக்குப் பொருந்துமா என்ற பிரச்னையும் ஏற்படலாம்.

## ரயில்வே கட்டடத்தில் வைக்கப்படும் மூட்டைகள் 'புக்' செய்யப்படுமுன் திருட்டுப்போனால், ரயில்வே நிர்வாகம் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப் பட்டவர்களா?

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதி: கனம் நீதிபதி மாக் அவர்கள்

ஆதாரம்: 1950 (2) மதராஸ் லா ஜர்னல் - 27.

எதையும் நீங்கள் நினைத்தவுடன் செய்யக் கூடிய காலம் இது அல்ல. பண்டங்கள் வாங்குவதற்கும், சினிமா டிக்கட் வாங்குவதற்கும், பஸ்ஸில் பிரயாணம் செய்யச் சீட்டு வாங்கவும் கூட 'க்யூ' வரிசையில் நின்று காத்திருந்து வாங்கவேண்டியிருக்கிறது. இப்படி இருக்கும் போது நீங்கள் ஒரு சாமானை உங்கள் ஊரிலிருந்து வேறு ஊருக்கு ரயில்வே 'குட்ஸ்' (Goods) மூலம் அனுப்புவது மட்டில் சுலபமாகச் செய்துவிடக்கூடிய காரியமாகுமா? ஆகாது. நீங்கள் அனுப்பவேண்டிய சாமான்களை நன்றாக 'பாக்' செய்து ரயில்வே ஸ்டேஷனில் இருக்கும் 'குட்ஸ் ஷெட்'டுக்குக் கொண்டு போக வேண்டும். அங்கே சில சமூனுக்களில்

கையெழுத்திட்டு ரயில்வே குமாஸ்தாவிடம் கொடுக்க வேண்டும். அனுப்ப வேண்டிய மூட்டைகளை அந்த ரயில்வே உத்தியோகஸ்தர் ஏற்றுக்கொண்டு, நிறை போட்டு அதற்கான கட்டண விகிதம் கண்டு உங்களுக்கு ரசீது கொடுப்பார். ஆனல் இவையெல்லாம் உடனே நடந்துவிடும் விஷயங்கள் அல்ல. நீங்கள் கொண்டு போகும் மூட்டைகளைப் பலகாரணங்களைச் சொல்லி அக்குமாஸ்தா வாங்கிக் கொள்ள மறுக்கலாம். நீங்கள் எந்த ஊருக்கு அனுப்ப வேண்டுமோ அவ்விடத்திற்கு அன்று தினம் 'புக்கிங்' இல்லை என்றும் அவர் சொல்லலாம். இவ்விதம் அவர் சொன்னல் வண்டிச் சத்தம் முதலிய செலவு செய்து நீங்கள் ரயிலடிக்கு எடுத்துச் சென்ற மூட்டைகளை மறுபடியும் உங்கள் இருப்பிடத்திற்குச் செலவு செய்து எடுத்துச் செல்ல வேண்டும். வீண் செலவு, வீண்கால தாமதம், இவைகளைத் தடுக்கவே, அடிக்கடி ரயில் மூலம் மூட்டைகள் அனுப்பும் வியாபாரிகள் அதற்கான கமிஷன் ஏஜண்டுகளை நியமித்து, அவர்கள் மூலம் இக்காரியத்தை செய்து கொள்கின்றனர். இவ்விதம் உதவி செய்யும் கமிஷன் ஏஜண்டுகள் ரயில்வே சிப்பந்திகளுக்குப் பழக்கமுள்ளவர்களாகவே இருப்பார்கள். எந்த இடத்திற்கு என்றைய தினம் 'புக்கிங்' செய்ய வேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியும். சில சமயங்களில் இவர்கள் எடுத்துப் போகும் மூட்டைகளைச் சட்டப்படி 'புக்' செய்து ரசீது வாங்குவதற்கு முன் ரயில்வே கொட்டகையிலேயே அவைகளைப் போட்டுவிட்டுப் போவதுமுண்டு. இவ்விதம் ரயில்வே சிப்பந்திக்குத் தெரிந்து, ஆனல் ரசீது பெற்றுக்கொள்ளாமல், ரயில்வே கட்டடத்தில் வைத்துவிட்டுப்போன மூட்டைகள் திருட்டுப் போனல் அதற்கு ரயில்வேக்காரர்கள் ஜவாப்தாரி ஆவார்களா?

அம்மூட்டைகளுக்குத்தான் இன்னும் ரயில்வே உத்தியோகஸ்தர் யாதொரு அதிகார பூர்வமான ரசீது கொடுக்கவில்லையே; இருந்தாலும் அவருக்குத் தெரிந்தே மூட்டைகள் ரயில்வே கட்டடத்திற்குள் வைக்கப்பட்டன. இது ஒரு சிக்கலான பிரச்னைதான். இப்பிரச்னைதான் இவ்வழக்கில் தீர்ந்தது.

ஒரு ஜவுளி வியாபாரி மதராஸ் பீச் ஸ்டேஷனிலிருந்து தூத்துக்குடிக்கு ரயில்வே 'குட்ஸ்' மூலம் 6 பெரிய ஜவுளி 'பேல்'கள் அனுப்ப வேண்டியிருந்தது. ஒவ்வொரு பேல்மூட்டையிலும் சுமார் ரூபாய் 2000 பெறுமான ஜவுளி இருந்தது. இம்மூட்டைகள் ஒரு வண்டி மேஸ்திரி மூலம் அனுப்பப்பட்டன. இவ்வண்டி மேஸ்திரி ரயிலடியில் பழக்கப்பட்டவர். 6 மூட்டைகளையும் 'குட்ஸ் ஷெட்'க்குள் சாயங்காலம் அடுக்கிவிட்டுப் போய்விட்டார். மறுதினம் காலையில் அனுப்புக் குறிப்பு (Forwarding Note) பொறுப்புக் குறிப்பு (Risk Note) இவைகளை நம்பர் செய்து கொண்டு மூட்டைகள் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்குப் போனபோது ஒரு மூட்டையைக் காணவில்லை. உடனே இது ரயில்வே அதிகாரிகளுக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப் பட்டது. (இன்னும் இம்மூட்டைகளுக்கு ரயில்வே உத்தியோகஸ்தர் ரசீது கொடுக்கவில்லை) போலீஸ் விசாரணை முதலிய நடந்து கொண்டே இருக்கும் போது இன்னும் சில தினங்களில் இன்னும் இரண்டு மூட்டைகள் திருட்டுப் போயின. திருடர்களும் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள்மீது கிரிமினல் வழக்குத் தொடரப்பட்டுத் தண்டனை அடைந்தனர். அத்திருடர்கள் காண்பித்த இடங்களிலிருந்து 28 புடைவைகள் தான் போலீசார் மீட்க முடிந்தது. இந்தப் புடைவைகள் மட்டில் ஜவுளி வியாபாரியிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

ஆனல் மூன்று பெரிய பேல் மூட்டைகளை இழந்த ஜவுளி வியாபாரி தென்னிந்திய ரயில்வேயின்மீது, காணமற்போன 3 ஜவுளி பேல்களின் கிரயம் ரூ. 6981-10-0 நஷ்ட ஈடாகத் தமக்குக் கிடைக்க வேண்டுமென்று தாவா செய்தார். ரயில்வேக்காரர்கள் கக்ஷி சொன்னர்கள். அதாவது:- "ரயில்வே சிப்பந்திகள் அம்மூட்டைகளை ஏற்றுக்கொண்டு ரயிலில் ஏற்றி ரசீது கொடுக்கும்வரை ரயில்வே நிர்வாகத்திற்கு சட்டப்படி யாதொரு பொறுப்பும் இல்லை. அதற்கு முன் கெட்டுப்போன மூட்டைகளுக்கு நாங்கள் ஜவாப்தாரி அல்ல. மூட்டைகள் ரயில்வே சிப்பந்திகளுக்குத் தெரிந்து ரயில்வே

கட்டடத்திற்குள்ளேயே இருந்து காணமற் போனலும் ரயில்வே நிர்வாகம் அதற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதில்லை'' என்று கக்ஷி சொன்னர்கள்.

இக்கக்ஷியை நீதிபதி அவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. ரயில்வே அதிகாரி ஒருவருக்கும் தெரிவிக்காமல், மூட்டைகளை ரயில் மூலம் அனுப்ப 'புக்கிங்' செய்வதில் அடங்கிய பல செய்கைகளில் யாதொன்றும் செய்யாமலும் இருக்கும்போது கெட்டுப்போகும் சாமான் களுக்கு ரயில்வேக்காரர்கள் பொறுப்பாளி ஆக மாட்டார்கள் என்றும், ஆனல், ரயில்வே சிப் பந்திகளின் அனுமதியின் பேரில், ரயில்வேக் காரர்களிடம் பூட்டுச்சாவி இருக்கும் அறைக்குள் போடப்பட்டிருக்கும் மூட்டைகளுக்கும் சாமான் களுக்கும் ரயில்வே நிர்வாகம்தான் பொறுப்பாளி என்றும், எல்லாம் பூர்த்தியாகி, கடைசியில் கொடுக்கப்பட வேண்டிய ரசீது கொடுக்கப்படும் வரை ரயில்வேக்குப் பொறுப்பு இல்லை என்று சொல்வது சட்டப்படி தவறு என்றும், ரசீது கொடுக்கப்பட் டிருந்தாலும் கொடுக்கப்படாம லிருந்தாலும் அவர்கள் வசம் ஒப்படைக்கப்படும் சாமான்களுக்கு அவர்கள்தான் ஜவாப்தாரி என்றும் நீதிபதி அவர்கள் சட்ட விளக்கம் செய்தனர். ஆனல் இப்பொறுப்பு சாமான் அனுப்புபவர்கள் ரயில்வேக்கு எழுதிக்கொடுக்கும் பொறுப்புச் சீட்டின் (Risk Note) ஷரத் துப்படி குறைக்கப்படலாமே ஒழிய ரயில்வே யின் பொறுப்பு வேறு வகையில் குறையாதென் றும் அபிப்பிராயப்பட்டனர். இவ் வழக்கில் கொடுக்கப்பட்ட பொறுப்புச் சீட்டின் (Risk Note) படி பார்த்தால் ரயில்வே சிப்பந்திகளின் நடத்தைத் தவருல் ஏற்படும் நஷ்டத்திற்குத் தான் ரயில்வே நிர்வாகம் பொறுப்பு ஏற்றுக் கொள்ளுமென்று இருக்கிறது. இவ்வழக்கில் முதல் தினம் ரயில்வே சிப்பந்திகளுக்கு தெரிவிக்காமல் மூட்டைகள் வைக்கப்பட்டபடி யால் அன்று திருட்டுப்போன ஒரு மூட்டைக்கு ரயில்வே நிர்வாகம் பொறுப்பாளி அல்ல என்றும் ஆனல் ரயில்வே சிப்பந்திகளிடம் ரசீது வாங்கா விட்டாலும் அவர்களுக்குத் தெரிவித்துப் பூர்வாங்கமான பதிவு செய்துகொள்ளப்பட்ட பிறகு திருட்டுப்போன இரண்டு மூட்டைகளுக் கும் ரயில்வேதான் பொறுப்பாளிகள் என்றும் மூட்டைகள் அடுக்கி இருந்த அறை பூட்டப் பட்டிருந்தாலும் கேட்டின் அருகில் ஒரு ஆள் நுழையும் ஒரு ஓட்டை மூடப்படாமல் வைக்கப் பட்டிருந்தது ரயில்வேக்காரர்களின் அசட்டை யால் தான் என்றும், மேலும் ரயில்வே சிப்பந்தி களின் உடந்தை இல்லாமல் இத் திருட்டுப் போயிருக்க முடியாதென்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு, பொறுப்புச் சீட்டின் (Risk Note) படிக்கே ரயில்வேக்காரர்கள் இரண்டு பேல்களின் மதிப்பை (அதில் அவரிடம் போலீ சார் திருப்பிக் கொடுத்த புடவைகளின் மதிப்புப் போக பாக்கியை) நஷ்ட ஈடாக ஜவுளி வியா பாரிக்குக் கொடுக்கவேண்டுமென்றும் தீர்ப்பளித் தனர்.

## திருட்டுப் போன சாமான் யாரிடமிருக்கிறதோ அவர் குற்றவாளியாவாரா?

**கோர்ட்: சென்னை ஹைகோர்ட்**

**நீதிபதிகள்: கனம் நீதிபதி சோமசுந்தரம் அவர்கள்.**

**ஆதாரம்: 63 லா வீக்லி - 593.**

நீதிஸ்தலங்களில் ருசுவாக வேண்டிய விஷயங் கள் எல்லாவற்றையும், அவைகளை நேரில் பார்த்த சாக்ஷிகள் மூலமோ, தஸ்தவேஜுகள் மூலமோ ருசுப்பிப்பது சில சமயங்களில் முடியாத காரியம். இச்சந்தர்ப்பங்களில் நீதிபதிக்கு ஒரு உரிமை உண்டு. அதாவது காலக்கிரமத்தில் நடக்கும் இயற்கைச் சம்பவங்களையும், பொதுவாக மனி தர்களின் நடத்தையையும், பொது அலுவல் களும் சொந்தத் தொழில்களும் நடந்து வரும் முறையையும் கவனித்து, ஒரு குறிப்பிட்ட சம்பவம் நடந்திருக்குமா? இருக்காதா, என்று நீதிபதி தாமே ஊகித்துக் கொள்ள உரிமை உண்டு. (செக்ஷன் 114, ருசுச்சட்டம்- Evidence Act) குறிப்பிட்ட அச் சம்பவத்தைப் பற்றி ஏதாவது விசேஷ சந்தர்ப்பங்கள் சேர்ந்திருந்தாலும் அதையும் கவனித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

உதாரணமாக:— ஒரு திருட்டு ஏற்படுகிறது. யார் திருடியதென்று ஒருவரும் கண்ணல் பார்க்கவில்லை. ஆனல் திருட்டு ஏற்பட்ட

உடனேயே திருட்டுப்போன சாமான் ஒருவர் கையில் இருக்கிறது. அச்சாமான் தம்மிடம் எப்படி வந்ததென்று அவர் சமாதானம் சொன்னு லொழிய அவர் அதைத் திருடியிருக்க வேண்டும், அல்லது அது திருட்டுச் சாமான் என்று தெரிந்தே வாங்கி இருக்கவேண்டும் என்று நீதிபதி ஊகித்துக் கொள்ளலாம். தம்மிடம் எப்படி அச்சாமான் வந்ததென்று அதை வைத்திருந்தவர் சமாதானம் சொல்லி விட்டால், நீதிபதி இவ்விதம் ஊகிக்க முடியாது. அவர் சொல்லும் சமாதானம் பொய் என்று போலீசார் ருசுப்படுத்தி வேறு வகையில் தான் குற்றத்தை ருசுப்பிக்க வேண்டும். ருசுச் சட்டத் தில் (Evidence Act) இது ஒரு விதி.

கலியாணத்திற்காக வந்திருந்து ஊர் திரும்பும் ஒரு குடும்பத்தினர் தங்கள் பெட்டி படுக்கை களுடனும் மூட்டை முடிச்சுக்களுடனும் கோவூர் ரயில்வே ஸ்டேஷனில் ரயில் ஏறினர். ரயில் வண்டி கிட்டத்தட்ட தாங்கள் இறங்க வேண்டிய ஸ்டேஷன் வரும் போது தான் தங்கள் டிரங்குப் பெட்டியைக் கோவூர் ரயில்வே பிளாட்பாரத்திலேயே விட்டுவிட்டு வந்தது அவர் களுக்குத் தெரிந்தது. அப்பெட்டியில் பத்தாயிர ரூபாய்க்கு மேல் பெறுமானமுள்ள தங்க நகை களும் வெள்ளிச் சாமான்களும் இருந்தன. இறங்கும் ரயில்வே ஸ்டேஷனில் இது விஷயத்தை அதிகாரிகளுக்குத் தெரிவித்துக் கம்பிளெயிண்ட் கொடுத்தார்கள். இது மே மாதம் 6 ஆம் தேதி.

போலீசாரால் புலன் விசாரணை நடத்தப் பட்டது. கோவூரை விட்டு ரயில் கிளம்பியதும் பிளாட்பாரத்தில் இப்பெட்டியைப் பார்த்த ஒரு ரயில்வே கூலி அதை எடுத்துப் போய் உதவி ஸ்டேஷன் மாஸ்டர் அறையில் வைத்ததாகவும், கொஞ்ச நேரம் கழித்து இப்பெட்டி அங்கிருந் தும் காணமற் போய் விட்டதாகவும் தெரிய வந்தது. ரயில்வே கூலியின் பேரிலும், உதவி ஸ்டேஷன் மாஸ்டர் பேரிலும் அந்த ஸ்டேஷ னில் வேலை செய்த ஒரு பாயிண்ட்ஸ்மன் பேரிலும் போலீசாருக்குச் சந்தேகம் இருந்து வந்தது. ஜூன் 2 ஆம் தேதி போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் நேரில் வந்து விசாரணை செய்தார். அப்பொழுது பாயிண்ட்ஸ்மன் வேலை பார்த்த சிப்பந்தி காணமற்போன டிரங்குப் பெட்டியைப் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் தாகல் செய்து அது தம்மிடம் எப்படி வந்ததென்றும் எழுதிவைத்தார். தம்மீதும் மற்ற ரயில் சிப்பந்திகள் மீதும் போலீசார் சந்தேகப்பட்ட தனுல் ஏற்பட்ட அவமானத்தைப் போக்க, தாம் பெட்டியைப் பல இடங்களில் தேடிக் கொண்டு வரும்போது இப்பெட்டி ஒரு கிணற்றில் இருந்து அகப்பட்டதாகவும் சொன்னர்.

இவர் மீது போலீசார் திருட்டுக் குற்றத்திற் காகப் பிராது கொடுத்தனர். எதிரி திருடியதை நேரில் பார்த்த சாக்ஷிகள் இல்லை. திருட்டுச் சாமான் எதிரியினிடம் இருந்த ஒரே சந்தர்ப் பத்தை வைத்துக் கொண்டு (முன் விளக்கப்பட்ட சட்ட விதியை அனுசரித்து) எதிரிதான் அதைத் திருடி யிருக்க வேண்டு மென்று மாஜிஸ்ட்ரேட் தீர்மானம் செய்து எதிரிக்கு ஆறுமாத கடுங் காவலும் ரூ. 200 அபராதமும் விதித்தார். அப்பீலிலும் இது உறுதி செய்யப்பட்டது. எதிரி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

ஹைகோர்ட்டில் உயர் நீதிபதி குற்றம் ருசுவாகவில்லை என்று அபிப்பிராயப்பட்டனர். திருட்டுப்போன சொத்து எதிரியிடம் இருந்தது வாஸ்தவம்தான். அச்சாமான் தம்மிடம் எப்படி வந்ததென்று எதிரி யாதொன்றும் சொல்லா மலே இருந்திருந்தால் மட்டில் தான், அவர் தான், குற்றம் செய்தவரென்று நீதிபதி ஊகித்துக் கொள்ளச் சட்டம் இடம் கொடுக் கிறதே ஒழிய, அச்சாமான் தம்மிடம் எப்படி வந்ததென்று எதிரி, சமாதானம் சொன்னல் இவ்விதம் ஊகிக்கச் சட்டம் இடங் கொடுக்கா தென்றும், அப்படிச் சமாதானம் சொன்னல் அச்சமாதானம் பொய் என்றும், வேறு ருசுக் களாலும் குற்றத்தைப் போலீசார் தான் ருசுப்பிக்க வேண்டும் என்றும், இச் சந்தர்ப் பத்தில் நீதிபதி ருசுவில்லாமல் குற்றத்தை ஊகித்துக் கொள்ள முடியாதென்றும் உயர் நீதிபதி அவர்கள் சட்ட விளக்கம் செய்திருக் கின்றனர். இவ்வழக்கில் அவ்விதம் குற்றத்தை ஊகிக்க முடியாததாலும் வேறு ருசுவில்லாத தனுலும் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.



# கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் **அபிப்பிராயமே.**

**கேள்வி:** (L. 3148 - பாலு - பட்டுக்கோட்டை) ஒரு கடையை இருவர் கூட்டாக நடத்துகிறார்கள். மூலதனம் ஒருவருடையது. மற்றவரின் உழைப்புத்தான் முதல். இவ்வாறு இரண்டு வருடங்கள் முடிவில் லாபத்தை உழைப்புக் கூட்டாளியும் உழைக்காத முதல் போட்டவரும் பகிர்ந்து கொண்டார்கள். ஆனால் உழைத்தவருக்குப் பங்கு வீதத்தைச் சம்பளமாகவே எழுதப் பட்டது. மூன்றாவது ஆண்டில் அதிக லாபம் கண்ட முதலாளி உழைப்புக் கூட்டாளிக்கு (குறிப்பிட்ட தொகையைச்) சம்பளமாகத்தான் கொடுக்கமுடியுமென்று சொல்ல உரிமை உண்டா? எழுத்து மூலம் ஒன்றும் இல்லை.

**பதில்:** வேறு எவ்வித ஒப்பந்தமும் இல்லாவிட்டால், லாபத்தின் ஒரு பங்கைச் சம்பளமாக அடையும் சிப்பந்தி (அவ்விதம் பங்கு அடைவதால் மாத்திரம்) கூட்டாளி ஆகிவிடமாட்டார். (இந்தியன் பார்ட்னர்ஷிப்-ஆக்ட்-செக்ஷன் 6)

**கேள்வி:** (L. 3161-மயில்சாமி-பொள்ளாச்சி) மைனர் மேஜராகும் வயது என்ன? மேஜராகும் முன்பு சொத்தின் பேரில் மைனர் சட்ட பூர்வமாகக் கடன் வாங்க முடியுமா?

**பதில்:** 18 வயது பூர்த்தியானவர்தான் மேஜர். கார்டியன் அண்டு வார்டு சட்டப்படி ஒரு மைனருக்குக் கோர்ட்டால் கார்டியன் நியமிக்கப்பட்டிருந்தால் அந்த மைனருக்கு 21 வயது பூர்த்தியானால்தான் மேஜர் ஆவார். மேஜராகும் முன்பு சொத்தின் பேரில் மைனர் சட்ட பூர்வமாகக் கடன் வாங்க முடியாது.

**கேள்வி:** (L. 3173 - வேலாயுதம்-தஞ்சை) "வக்கீல்" 1950 ஜனவரி இதழில் (விளக்கப்பட்ட) மசோதா நிலைமையில் இருக்கும் ஹிந்து சட்டத்தில் சுவீகாரம் செய்து கொள்ள மனைவியின் சம்மதம் வேண்டுமென்றும் அம்மனைவி மைனராகவோ பைத்தியமாகவோ இருந்தால் சம்மதம் வேண்டாமென்றும் இருக்கிறது. மனைவி மேஜரான பிறகோ, பைத்தியம் தெளிந்த பிறகோ சுவீகாரத்தை ரத்து செய்யச் சட்டம் இடம் தருமா?

**பதில்:** மசோதா நிலைமையில், மனைவி அச்சுவீகாரத்தை ரத்து செய்ய இடம் கொடுக்கவில்லை. ஆனால் மசோதா சட்டமான பிறகு எப்படி இருக்குமோ, தெரியாது.

**கேள்வி:** (ஷ) சொத்து மைனர் எஸ்டேட்டாக இருக்கும் போது கார்டியன் கவனிப்புக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ மைனரின் காலி இடத்தில் சொத்துக்குப் பாத்தியமில்லாத ஒருவரால் வீடுகட்டப்பட்டு விட்டால், மைனர் மேஜரானவுடன் வழக்குத் தொடரலாமா?

பதில்: தொடரலாம்.

கேள்வி: (L. 3179 - சுப்பிரமணியம்-திண்டுக்கல்) புதிதாக வியாபாரம் ஆரம்பித்தவர், தம்மை எ. சி. டி. ஓ. விடம் பதிவு செய்து கொண்டும், சுமார் 3 மாத வியாபாரத்தில் மொத்த விற்பனை ரூ. 10,000-த்தை அடைந்து விட்டபடியால், இதை விற்பனைவரி அதிகாரிக்குத் தெரிவித்து, அவரிடமிருந்து சம்மன் வந்ததின் பேரில் கணக்குப் புத்தகங்களையும் ஆஜர் செய்கிறார். அதன் பிறகு சுமார் 6 மாதகாலம் வரை வியாபாரிக்கு எ.சி.டி.ஓ விடமிருந்து யாதொரு தகவலும் கிடைக்கவில்லை. விற்பனைவரி எவ்வளவு என்று தெரியாததால் வியாபாரி யாதொரு வரியும் கட்டாமலே வியாபாரம் நடத்தி வந்தால் அது குற்றமாகுமா? அப்படியானல் அதை நீக்க என்ன வழி?

பதில்: முதல் வருடத்தில் எவ்வளவு வரி எந்த எந்தக் கெடுவில் கட்டவேண்டுமென்று விற்பனைவரி அதிகாரியிடமிருந்து உத்தரவு வந்த பிறகு அதன்படி வரி கட்டாவிட்டால்தான் குற்றமாகும். பிந்திய வருடங்களில் உத்தரவு வரத் தாமதமேற்பட்டாலும், முந்திய வருடத்தில் கட்டி வந்தது போல் கட்டிக்கொண்டே வர வேண்டும்.

கேள்வி: (L. 3191-சம்சுதீன் - வியாங்கொடை-சிலோன்) நான்கு வருடம் கெடுப் போட்டு ஒருவர் தம் நிலத்தை ஒத்தி வைத்து அவரே குத்தகைக்கும் வைத்துக் கொண்டிருக்கிறார். நிலத்தின் மகசூலையும் ஒத்திதாரிடம் சரிவரக் கொடுக்கவில்லை. கெடுமுடிந்தும்தொகையும் கொடுக்கவில்லை. ஒத்திப்பணத்தை எப்படி வசூல்செய்யலாம்?

பதில்: கெடுமுடிந்ததும் தாவா செய்து, டிக்ரிவாங்கி, நிலத்தைக் கோர்ட் ஏலத்தில் விட்டு ஒத்திப்பணத்தைவசூல் செய்யலாம்.

கேள்வி: (L. 3198 - சொக்கலிங்கம் செட்டியார், கொல்லங்கோடு) ஹிந்து குடும்பத்தில் பிறந்த விவாகமான பெண்களுக்குத் தகப்பனரால் சம்பாதிக்கப்பட்ட சொத்தில் வார்சுபாத்தியமுண்டா? வார்சு பாத்திய முண்டானல் ஆண் மக்களுக்கும் கலியாணமான பெண்களுக்கும் சம உரிமையா?

பதில்: இப்பொழுது இருக்கும் ஹிந்து சட்டப்படி, தகப்பன் இறந்தவுடன் அவருக்கு மகன் இருந்தால், மகன்தான் வார்சு. பெண்கள், விவாகமானலும் ஆகாவிட்டாலும் வார்சாக மாட்டார்கள். மகன், பேரன், பேரனின்மகன், மனைவி இவர்கள் ஒருவரும் இல்லாவிட்டால்தான் தகப்பனுடைய சொத்துக்குப் பெண் வார்சு ஆவாள்.

கேள்வி: (L. 3201-கமலா-விருதுநகர்) ஒரு ஹிந்து குடும்பத்தில் அண்ணன் தம்பி இருவர் இருக்கிறார்கள். அண்ணனுக்கு ஒரு மகன் உண்டு. தம்பிக்குப் பிள்ளை இல்லை. ரொக்கமும் நகையும் வீடும் நிலமும் இருக்கின்றன. (தம்பிக்கு) மனைவியார் இருவர். திடீரென்று தம்பி இறக்கிறார். ரொக்கமும் நகையும் யாரைச் சேர்ந்தவை? வார்சு யார்? வீடும் நிலமும் இறந்தவர் பெயரில் இருக்கின்றன. மனைவிகளுக்குப் பின் வார்சு யார்? கடன் கிடையாது. நிலத்தில் வருகிற வருமானமே சாப்பாட்டிற்குப் போதும். அதை மனைவி விற்க முடியுமா?

பதில்: இவ்விதக் கேள்விகளுக்கு பல வகையான பதில்கள் கொடுக்கலாம். அண்ணனும் தம்பியும் ஒரே பிரிபடாத குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கும் போது தம்பி இறந்து போய், சொத்துக்கள் குடும்பப் பொதுச் சொத்துக்களாக இருந்தால் அச்சொத்துக்களில் ஒரு பாதியை இறந்தவரின் இரு மனைவிகளும் அவர்கள் ஆயுள்வரை அனுபவிக்கலாம். மற்றொரு பாதி அண்ணனுக்கும் அண்ணன் மகனுக்கும் இருந்து வரும். பிரிபட்ட குடும்பமாக இருந்தாலும், சொத்துக்கள் இறந்தவருடைய தனி உரிமை உள்ள சொத்துக்களாக இருந்தாலும், இறந்தவருடைய மனைவிகளே எல்லாச் சொத்துக்களையும் வார்சு முறையில் அடைவார்கள். அதை அவர்கள் ஆயுள்வரை அனுபவிக்கலாம். அவசியமான நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டால்தான் விற்கமுடியும். அவர்

களுக்குப்பிறகு அனந்தர வார்சுகள் அடைவார்கள்.

கேள்வி: (L. 3204-தங்கசாமி-கொத்தமங்கலம்) ஒருவருக்கு (ஹிந்து) ஐந்து புதல்வர்கள். ஐந்து பேருக்கும் விவாகமாகி மனைவி குழந்தைகளுடன் விவசாயமே தொழிலாக வாழ்கிறார்கள். அவர்கள் விவசாயம் செய்யும் நிலபுலம் பூராவும் அவர்களின் தகப்பனாரால் கிரயம் வாங்கப் பட்டவையே தவிர, பாட்டன் சொத்து கொஞ்சம் கூட இல்லை. தற்பொழுது அவர்களின் தகப்பனார் பூரா நிலத்தையும் சொந்தச் செலவிற்காக விற்கலாமா?

பதில்: தகப்பன் பெயரால் வாங்கப் பட்ட சொத்து தகப்பனும் மகன்களும் சேர்ந்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு வாங்கப் பட்டிருந்தால் அது குடும்பச் சொத்தாகும். தகப்பன் மட்டில் பூரா சொத்தையும் சொந்தச் செலவுக்காக விற்கமுடியாது. அப்படிக்கில்லாமல் தகப்பனுடைய தனி சம்பாத்தியத்திலிருந்து வாங்கப்பட்ட சொத்தாக இருந்தால் அது அவருக்கு மட்டில் தான் சொந்தம். அவர் இஷ்டப்படி விற்கலாம்.

கேள்வி: (ஷை) ஒருவருடைய மனைவி தன் புருஷன் மறுமணம் செய்து கொள்ளச் சம்மதித்து, விவாகம் முடிந்தவுடன் அவள் விவாக ரத்து கோரவோ ஜீவனாம்சம் கேட்கவோ உரிமை உண்டா?

பதில்: உண்டு.

கேள்வி: (L. 3222 - கிருஷ்ணன்) ஒரு நபருக்குத் தன் சொந்த ஊரில் ஒரு கடையும் மற்றொரு ஊரில் ஒரு கடையும் இருக்கின்றன. இவர் ஒவ்வொரு கடைக்கும் தனியாக இன்கம் டாக்ஸ் கட்டவேண்டுமா? அல்லது இரண்டு கடைக் கணக்கையும் சேர்த்து இன்கம் டாக்ஸ் கட்ட வேண்டுமா?

பதில்: இரண்டு கடைகளிலிருந்தும் அந்நபர் அடையும் மொத்த வருமானத்தின் பேரில்தான் வருமானவரி (இன்கம் டாக்ஸ்) விதிக்கப்படும். வருமான வரி என்பது ஒரு நபர் அடையும் மொத்த வருமானத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு அந்த நபர் மீது விதிக்கப்படும் வரியே ஒழிய ஒரு கடையின் மீது விதிக்கப் படும் வரி அல்ல.

கேள்வி: (L. 3223 - பக்கிரிசாமி—நாகபட்டினம்) ஷாப் சட்ட புதிய திருத்தப்படி, சம்பள ஆள் இல்லாமல் நடத்தும் தனி நபருக்கோ, அவர் கூட்டுக் குடும்பதாருக்கோ மட்டும், ஒரு வருடம் ஷாப் சட்டம் இல்லை என்பது இரு நபர்கள் கூட்டமாக நடத்தும் வியாபாரத்திற்குச் செல்லுமா?

பதில்: கூட்டாக நடத்தும் வியாபாரத்திற்கு மேற்கண்ட விதிவிலக்கு கிடையாது. அதாவது அவர்களுக்கு ஷாப் சட்டம் உண்டு.

கேள்வி: (L. 3224 - பாலு பிள்ளை - சிதம்பரம்) ஒரு ஹிந்து குடும்பத்தில், தகப்பன் கடன் இல்லாமல், தன் சகோதரரிடம் பாகம் பிரித்த பின்னர், தகப்பனும் முதல் மகனுமாய்ச் சேர்ந்து சில சொத்துக்களை அடமானம் வைத்து, பின்பு அடமானதாரன் கோர்ட்டில் தாவா செய்து இரண்டாவது மகன் மைனருக்குத் தாய் மாமனைக் கோர்ட்டில் கார்டியனாக நியமித்து, டிக்ரி ஏற்பட்டு, சொத்தைக் கோர்ட் ஏலத்தில் விட்டால்--மைனர் இரண்டாவது மகன் மேஜரானவுடன் ஏலம்போன சொத்தில் பாகம் கொண்டாட முடியுமா? மைனர் வியாஜ்யம் போட்டால் செல்லுமா?

பதில்: குடும்ப அவசியமான கடனாக இருந்தால் அது மைனர் மகன் உட்பட எல்லா பாகஸ்தர்களையும் கட்டுப் படுத்தும்- அதற்காக ஏற்பட்ட கோர்ட் ஏலமும் மைனரைக் கட்டுப்படுத்தும். தவிர ஹிந்து சட்டத்தில் தகப்பன் பட்ட கடனை மகன் (குடும்ப சொத்தில் தன் வீதத்திலிருந்தும்) கொடுக்கக் கடமைப் பட்டவன். தகப்பனுடைய கடன் குடும்ப அவசியமான விஷயங்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டுமென்பதும் இல்லை. ஆனால் தகப்பனுடைய துன்மார்க்கக் கடன்களையும் சட்ட விரோதமான கடன்களையும் மட்டில் மகன் கொடுக்கக் கடமைப் பட்டவனல்ல. கோர்ட் ஏலம் தம்மைக் கட்டுப் படுத்தாது என்று கேட்கும் மைனர் மகன் கீழ்க் கண்டவை

களை ருசுப்பிக்க வேண்டும்:— (1) டிக்ரிக் கடன் தன் தகப்பனுடைய துன்மார்க்கச் செலவுக்காக அல்லது சட்ட விரோதமான காரியங்களுக்காக ஏற்பட்ட கடன். (2) கோர்ட் ஏலத்தில் சொத்துக்களை வாங்கியவருக்கு இவ்விஷயம் முன்னதாகவே தெரியும். (3) தம்முடைய கார்டியன் மோசடியாகவோ அலட்சியத்தினாலோ சரியாகக் கக்ஷியாடாமல் இருந்துவிட்டார் என்று ருசுப்பித்தால் மைனராக இருந்தவர் தம்முடைய பாகத்தைத் திரும்ப அடைய முடியும்.

**கேள்வி:** (L. 3253 - குருசாமி - ராமநாதபுரம்) வியாபாரிகளுக்கு அவரவர் பெயரால் நேரடியில் வாங்கி அனுப்பி, அதனால் கிடைக்கும் தரகு வகைக்கு மட்டும் ஒருவர் வரவு செலவுக் கணக்கு வைத்து, கடிதப் போக்கு வரத்து செய்து வந்தால், விற்பனை வரிச்சட்டம் அக்கணக்கைக் கட்டுப்படுத்துமா? அல்லது தரகுக்கு லைசென்ஸ் உண்டா?

**பதில்:** விற்பனை வரிச்சட்டம் 8-ஆவது செக்ஷன்படி கமிஷன் ஏஜண்டுகள் அதற்கான லைசென்சு வாங்கிக்கொண்டு தொழில் செய்தால் மட்டில் விற்பனை வரி கிடையாது லைசென்சு வாங்கிக் கொள்ளாமல் "வியாபாரம்" செய்தால் விற்பனை வரி கொடுக்க நேரிடலாம். கமிஷன் ஏஜண்டுகள் விற்பனை வரி கொடுக்கவேண்டுமா என்ற விஷயத்தைப்பற்றிச் சென்னை ஹைகோர்ட்டில் சமீபத்தில் ஒரு தீர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. (1950 (1) மதராஸ் லா ஜர்னல் பக்கம் 564 பார்க்கவும்) இத்தீர்ப்பின்படி சரக்குகளை உண்மையாக வேறு ஒருவருக்காகவே வாங்கியும், விற்றும், தரகுத் தொழில் மட்டில் செய்பவர்கள், விற்பனை வரிச் சட்டப்படி "வியாபாரிகள்" ஆக மாட்டார்கள் என்றும் அவர்கள் லைசென்ஸ் வாங்கிக் கொள்ளாவிட்டாலும் பாதகமில்லை என்றும், விற்பனைவரிச் சட்டத்தின் 8 ஆவது செக்ஷனில் கண்டிருக்கும் விதிவிலக்கு இவர்களுக்கு அவசியமில்லை என்றும் உயர்நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். "வியாபாரிகள்" தான் விற்பனைவரி கொடுக்கவேண்டும் என்ற 3-ஆவது செக்ஷன் விதிக்குள் 'தரகர்கள்' வரமாட்டார்கள் என்றும், விதிக்குள் மாட்டிக் கொள்ளாத இவர்களுக்கு 'விதிவிலக்கு' அவசியமில்லை என்றும் நீதிபதிகளின் அபிப்பிராயம்.

**கேள்வி:** (L. 3282-முத்துக்குமாரசாமி-கப்பளாங்கரை) ஒரு ஹிந்து தகப்பனார் எந்த வகையில் சம்பாதித்த சொத்துக்கள் சுய சம்பாத்தியமாகக் கருதப்படும்? ஒரு ஹிந்து தகப்பனார் குடும்பத்தலைவராக இருந்து, அவருக்கு முற்பட்ட குடும்பத்தாரிடம் பாகம் வாங்கிய பூமியையும் ரொக்கப்பணத்தைக் கொண்டும் சொத்து ஈடு முதலிய கொடுத்தும் காண்டிராக்ட் தொழில் செய்தும் விருத்தி செய்யப்பட்டு அவர் பெயரால் (புது) சொத்துக்கள் வாங்கி இருந்தால், இப்புதுச் சொத்துக்கள் அவருடைய சுயேச்சையான சொத்துக்களா—அல்லது பொதுக் குடும்பச் சொத்துக்களா?

**பதில்:** பூர்வீக சொத்தின் உதவியைக் கொண்டோ, அதன் வருமானத்தைக் கொண்டோ வாங்கப்படும் சொத்துக்கள் குடும்பச்சொத்துக்களாகும். தகப்பன் தம்முடைய பாகசொத்தின் வருமானத்தைக் கொண்டு விருத்தி செய்து, தம் பெயராலேயே வாங்கும் சொத்துக்களும் பொது குடும்ப சொத்துக்கள் தான். இவை அவருடைய சுய சம்பாத்திய சொத்தாகக் கருதப்படமாட்டா. இவ்வித சொத்துக்களில் அவருடைய மகன்களுக்கும் உரிமை உண்டு.

—::—

# கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
## இதர சர்க்கார் அறிக்கைகள்

# கண்ட்ரோல் சட்டத்திருத்தம்

### அமிதப்பதுக்கலுக்கு கடும் தண்டனை; ஜாமீனில் விடுவது கஷ்டம்; துரித விசாரணை.

[1950 ஆம் வருடத்திய 52 ஆவது (மத்திய) சட்டம், (The Essential Supplies (Temporary Powers) Amendment Act, 1950)

இந்திய பார்லிமெண்ட்டால் நிறைவேற்றப் பட்டது. 14—8—1950ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம், 16—8—1950 தேதியுள்ள விசேஷ இந்தியா கெஜட், பாகம் II செக்ஷன் 1 பக்கம் 217-ல் பிரசுரமாகி இருக்கிறது.]

சில குறிப்பிட்ட அத்தியாவசியமான பொருள்களின் உற்பத்தி, சப்ளை, விநியோகம், விலை இவைகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்பட்டிருக்கும் 1946 ஆம் வருடத்திய 24 ஆவது (மத்திய) சட்டத்தில் (The Essential Supplies Temporary Powers Act 1946) இத்திருத்தச் சட்டத்தால் பலமுக்கிய மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அத்திருத்தங்களின் விபரம்:—

இச்சட்டம் காஷ்மீர் தவிர அகில இந்தியா முழுவதும் இப்பொழுது அமுலுக்குக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. மேலும் 1—4—1951 உடன் இக்கண்ட்ரோல் சட்டம் அமுல் இழந்து விடுவதாக இருந்தது மாற்றப்பட்டிருக்கிறது. அச்சட்டம் 31—12—1952 முடிய அமுலில் இருக்கும்.

"அத்தியாவசியப் பொருள்" என்ருல் எவை என்று சட்டத்தில் ஒரு ஜாப்தா இருக்கிறது. அத்துடன் இப்பொழுது "கால் நடைகளின் உணவுப்பண்டங்கள்" (அதாவது புண்ணாக்கும் மற்ற செயற்கைத் தீனி உள்பட) சேர்க்கப் பட்டிருக்கிறது. இவைகளுக்கும் இனி 'கண்ட்ரோல்' ஏற்படலாம்.

எந்த அத்தியாவசியமான பண்டங்களும் நியாயமான விலைக்குப் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுவதற்காக எவ்வித உத்தரவையும் பிரகடனம் செய்ய மத்திய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. மத்திய சர்க்கார் செய்யும் கண்ட்ரோல் உத்தரவின் மூலம் மத்திய சர்க்காருக்கோ, ஒரு ராஜ்ய சர்க்காருக்கோ, அல்லது எந்த சர்க்கார் அதிகாரிக்கோ தேவையான அதிகாரங்களைக் கொடுக்கலாமென்று இப்பொழுது திருத்தப் பட்டிருக்கிறது.

**தண்டனைகள்:**—கண்ட்ரோல் சட்டத்தையும் விதிகளையும் மீறுவதற்கான தண்டனைகளைக் குறித்த 7-வது செக்ஷன், பின் வருமாறு, திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

(1) பருத்தி ஜவுளி சம்பந்தமான கண்ட்ரோல் விதி அல்லது உத்தரவை மீறினுல் மூன்று வருஷம் வரை சிறைத் தண்டனையும் அத்துடன் அபராதமும் விதிக்கப்படும். குற்றம் சம்பந்தப் பட்ட ஜவுளிகளும் சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்படும். (2) உணவுப் பொருள்களைப் பற்றிய கண்ட்ரோல் விதி அல்லது உத்தரவை மீறினுல் மூன்று வருடம்வரை சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படலாம். அபராதம் மட்டில் போதுமென்று மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோன்றினுல் அதன் காரணங்களை தீர்ப்பில் எழுதி, அபராதம் மட்டில் விதிக்கலாம். மேலும் குற்றம் சம்பந்தப்பட்ட உணவுப் பொருளை சர்க்காருக்குப் பறிமுதல் செய்யலாம். இதிலும் மாஜிஸ்ட்ரேட்டுக்கு யுக்தமென்று தோன்றினுல், தீர்ப்பில் காரணங்களைக் காட்டி, பறிமுதல் செய்யாமலும் இருக்கலாம்.

அமிதப் பதுக்கல்:—ஆனால் ஒருவர் எவ்வளவு உணவு தானியங்கள்தான் சட்டப்படி தம்மிடம் வைத்திருக்கலாம், என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவைப்போல் இரண்டு மடங்கிற்குமேல் அவரிடம் இருந்தால், "அமிதப் பதுக்கல்" என்ற அக் குற்றத்திற்கு அவருக்கு 7-வருடம் வரை சிறை தண்டனையும், அவரிடம் இருந்த உணவுப்பொருளின் மதிப்பைப்போல் 20-மடங்குக் குறையாத அபராதமும் விதிக்கப்படுவதுடன், அதிகமாக இருக்கும் ஜாடா உணவுப் பொருளும் சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்படும். (ஆனால் ஒருவர் எவ்வளவு அளவு உணவுதானியம் வைத்திருக்கலாமோ அதற்கு மேற்பட்டு 5-மணங்குக்குள் வைத்திருந்தால் 'அமிதப் பதுக்கல்' செய்ததாக கருதப்படமாட்டார்.) (3) பருத்தி ஜவுளி உணவுப்பொருள் இவை தவிர மற்ற அத்தியாவசிய சாமான்களைக் குறித்து கண்ட்ரோல் சட்டம் மீறப்பட்டால், அதற்கு 3-வருஷம் வரை சிறைத் தண்டனை, அல்லது அபராதமும், அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். குற்றம் சம்பந்தப்பட்ட பண்டங்களும் பறிமுதல் செய்யப்படலாம்.

### "அமிதப் பதுக்கல்" செய்பவர்கள் ஜாமீனில் வருவது கஷ்டம்.

உணவுப் பொருள்களை "அமிதப் பதுக்கல்" செய்த குற்றத்திற்காக அரெஸ்ட் செய்யப்பட்டவர்களையும் தண்டிக்கப் பட்டவர்களையும், ஜாமீனில் வெளியே விடுமுன், சர்க்கார் திறப்புக்கு அறிவித்து அவர்கள் ஆட்சேபனை சொல்ல சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும்; சர்க்கார் திறப்பில் எதிரியை ஜாமீனில் விடுவது ஆட்சேபிக்கப்பட்டால் எதிரி குற்றம் செய்திருக்க மாட்டார் என்று நம்பப் போதுமான காரணங்கள் இருந்தாலொழிய, நீதிபதி எதிரியை ஜாமீனில் விடக்கூடாதென்று சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

மேலும் சுருக்குமுறை விசாரணை (Summary trial) அனுஷ்டிக்கப்படாத வழக்குகளில் (விசேஷகாரணங்கள் இருந்தாலொழிய) எதிரியின்மீது குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்ட மறுதினமே விசாரணை நடத்தப்படவேண்டும்; மேலும் வழக்கு முடியும்வரை தினம் தினம் வழக்கு விசாரணை நடத்தப்பட்டு துரிதமாய் முடிக்கப்பட வேண்டும். என்று கண்ட்ரோல் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

## நூல்

ஒவ்வொரு மொத்தக் கன்சைனியும், மொத்த வியாபாரியும் அவருடன் இணைக்கப்பட்டிருக்கும் மொத்த வியாபாரிக்கும், சில்லறை வியாபாரிக்கும் நமூனா 1 படி, பேல் 'டெலிவரி' எடுத்த 24 மணி நேரத்திற்குள், விபரம் தெரிவிக்க வேண்டும் என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது.

(25-7-1950 சென்னை-சர்க்கார் கெஜட்—பாகம் II பக்கம் 954.)

## மின்சார வசதிக் கட்டுப்பாடு உத்தரவு

(1950) (Madras Electricity Supply (Restriction and Control) Order 1950) மின்சார உற்பத்தி குறையும்போதோ, நியாயமாகப் பகிர்ந்து கொடுப்பதற்காகவோ சென்னை சர்க்காருக்குப் புது அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. எந்த எலெக்ட்ரிக் சப்ளை கம்பெனியும் புது நபர்களுக்கு மின்சார வசதி அளிப்பதாக இருந்தாலும் பழைய நபர்களுக்கு வசதியை அதிகரிக்க வேண்டுமானாலும், சர்க்கார் உத்தரவின்றி அளிக்கக்கூடாதென்று, சர்க்கார் உத்தரவிடலாம். (இது பழைய நபர்களுக்குக் கத்திரித்துப்போன வசதியைத் திரும்ப இணைப்பதையும், ஓரிடமிருக்கும் வசதியை வேறு இடத்திற்கு மாற்றுவதையும் பாதிக்காது) ஆனால் தொழிற் சாலைகளுக்குக் கொடுக்கப்படும் மின்சார வசதி ஒரு தடவை கத்திரிக்கப்பட்ட பிறகு அதே நபர் திரும்ப இணைத்துத் தரும்படி கேட்டாலொழிய, சர்க்காரின் அனுமதி பெற்றுத்தான் புது நபருக்கு வசதி கொடுக்கப்படும். சர்க்கார் அனுமதி கொடுக்கும்போது இஷ்டப்பட்ட நிபந்தனைகளைச் சேர்க்கலாம். இன்னும் சில ஷரத்துக்களும் இருக்கின்றன.

(25-7-1950-சென்னை—சர்க்கார் கெஜட்—பாகம் I ரூல் சப்ளிமெண்ட்—பக்கம் 287)

## சிமெண்ட்

சிமெண்ட் விற்பனையைப்பற்றிய கட்டுப்பாடு உத்தரவில் கீழ்க்கண்டபடி சேர்க்கப்பட்டிருக்கிறது:—அதாவது மொத்தமாக சிமெண்ட் வாங்குபவர்கள் சாக்கு இல்லாமல் வாங்கிக் கொள்ள இஷ்டப்பட்டால் சாக்கின் கிரயத்திற்காக டன் ஒன்றுக்கு ரூ. 10—8—0 வீதம் விலையைக் குறைத்துக் கொள்ளவேண்டும்—என்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

(25-7-1950—சென்னை-சர்க்கார் கெஜட்—பாகம் II பக்கம்-951).

## ஷாப் சட்டம்

### சில விதிகள், சில ஸ்தாபனங்களுக்கு மட்டில் ஒரு வருஷத்திற்குக் கிடையாது

சென்னை ராஜ்யத்தில் மின்சார சக்தியின் உதவியால் உற்பத்தி வேலைகள் (Manufacturing Process) செய்யும் எல்லா ஸ்தாபனங்களுக்கும், 8-8-1950, முதல் ஒரு வருஷத்திற்கு ஷாப் சட்டத்தின் இரண்டு விதிகள் கிடையாது. அதாவது செக்ஷன் 7 (1) படி ஒவ்வொரு கடையும் தினசரி திறந்து மூடும் மணி நேரத்தைக் குறிப்பிடும் விதி; செக்ஷன் 11 (1)ன்படி ஒவ்வொரு கடையும் ஒரு வாரத்தில் ஒரு நாள் மூடப்பட்டிருக்க வேண்டுமென்ற விதி—இவை இரண்டும் கிடையாதென்று விதி விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.

[குறிப்பு:—இந்தச் சர்க்கார் உத்தரவின் வாசகம் சரியாக அமையவில்லை. கடைகளுக்கு மட்டில் பொருந்தும் இரண்டு விதிகள் 7 (1) 11 (1) கடைகள் அல்லாத மற்ற ஸ்தாபனங்களுக்கும் இருப்பது போல் இவ்விதிவிலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.]

(8-8-1950—சென்னை—சர்க்கார் கெஜட்—பாகம் I பக்கம் 2512)

## சில தொழிலாளர்களின் குறைந்த பட்ச சம்பள நிர்ணயம்.

1948 ஆம் வருடத்திய 11-ஆவது (மத்திய) சட்டம் (The Minimum Wages Act, 1948) என்பது சில குறிப்பிட்ட தொழில்களில் உள்ள தொழிலாளர்களுக்குச் சம்பளம் எதற்குக் குறைவாக இருக்கக் கூடாதென்று நிர்ணயம் செய்யச் சர்க்காருக்கு அதிகாரமளிக்கும் சட்டம்.

இச்சட்டத்தின் கடைசியில் பல தொழில்கள் குறிப்பிடப்பட்டு இவைகள் பாகம் 1 பாகம் 2 என்று பிரிக்கப் பட்டிருக்கின்றன. பாகம் 1ல் கண்ட தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து (15-3-1948) இரண்டு வருடங்களுக்குள்ளும், பாகம் 2ல் கண்ட தொழில்களுக்கு மூன்று வருடங்களுக்குள்ளும் ஒவ்வொரு வகைத் தொழிலாளருக்கும் குறைந்த பட்ச சம்பளம் எவ்வளவு என்று சர்க்கார் நிர்ணயம் செய்ய வேண்டும். அப்படி நிர்ணயம் செய்யுமுன் அதன் நகல்பிரசுரம் செய்து, சம்பந்தப் பட்டவர்களின் ஆட்சேபனைகளைக் கேட்டு பிறகு முடிவாகச் சம்பளம் நிர்ணயம் செய்யப்படும். அதற்குக் குறைவாகச் சம்பளம் கொடுத்தால், அதற்காக நியமிக்கப்படும் அதிகாரியிடம் தொழிலாளர் முறையிட்டுக் கொள்ள இடமுண்டு. எவ்வளவு தொகை குறைவாகச் சம்பளம் கொடுக்கப்பட்டதோ அதையும் அதைப்போல் 10 மடங்குத் தொகையும் தொழிலாளிக்குக் கொடுக்க நேரிடலாம்.

## மோட்டார் தொழிலாளர்கள் சம்பள நிர்ணயம்

முதல் பாகத்தில் கண்டிருக்கும் தொழில்களில் வேலை செய்பவர்களுக்கும் இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 15-3-1948 லிருந்து மூன்று வருடங்களுக்குள், அதாவது 15-3-1951 க்குள், குறைந்த பட்ச சம்பளத்தை நிர்ணயம் செய்யலாமென்று சர்க்காருக்கு 1950 ஆம் வருடத்திய 17 ஆவது அவசரச் சட்டம், அதிகாரம் கொடுக்கின்றது. இச்சட்டத்தை அனுசரித்து இப்பொழுது சென்னை சர்க்கார் ஒவ்வொரு வகைத் தொழிலாளர்களுக்கும் குறைந்த தினசரி அல்லது மாதச் சம்பளம் எவ்வளவு இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப் போவதாகக் கெஜட்டில் பிரசரம் செய்து வருகின்றனர்.

187699

ஆட்சேபனைகள் இருந்தால் அவர்கள் குறிப்பிட்ட தேதிக்குள் சென்னை, "கமிஷனர் ஆப் லேபர்" மூலமாகச் சென்னை, "டெவலப்மெண்ட் டிபார்ட்மெண்ட், சர்க்கார் செக்ரடரி" க்குத் தங்கள் ஆட்சேபனைகளைத் தெரிவிக்கலாம்.

## மோட்டார் தொழிலாளர்கள். பொது மோட்டார் போக்குவரத்து ஸ்தாபனங்களில் வேலையில் அமர்ந்திருப்பவர்களுக்கு

(Public motor Transport) கீழ்க்கண்டபடி குறைந்த விகிதச் சம்பளம் நிர்ணயம் செய்ய சென்னை சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர். ஆட்சேபனைகள் மேலே கண்ட அதிகாரிக்கு 25-9-1950-க்குள் தெரிவிக்கப் படவேண்டும்.

### போக்குவரத்து வேலையில் இருப்பவர்களுக்கு

1. டிரைவர்கள், மாதம் 1-க்கு ரூ. 40-0-0
2. லாரி டிரைவர்கள் — ,, ,, 45-0-0
3. கண்டக்டர்கள் — ,, ,, 30-0-0
4. கிளீனர் முதலிய பயிற்சி இல்லாத தொழிலாளர்கள் } தினசரி. 0-14-0

### போக்குவரத்து தொழிற்சாலையில் வேலையில் இருப்பவர்களுக்கு

1. அப்பரெண்டிஸ் (Apprentices) தினசரி ரூ. 1—0—0
2. போர்மன் (Foreman) மாதம் 1-க்கு ரூ. 100—0—0
3. மெகானிக் (Mechanics) ,, 75—0—0
4. உதவி மெகானிக் (Assistant Mechanics) ,, 50—0—0
5. பிட்டர் (Fitters) ,, 50—0—0
6. தச்சு வேலை, கொல்லு வேலை போன்ற பயிற்சி பெற்ற வேலை செய்பவர்கள். } தினசரி 1—8—0

(மேற்கண்ட குறைந்தபட்ச சம்பளம் என்பது பஞ்சப்படி, பாட்டா, நீங்கலாக)

(25-7-1950 சென்னை சர்க்கார் கெஜட்— பாகம் I பக்கம் 2425)

(6-6-1950 சென்னை சர்க்கார் கெஜட் I ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 241)

## முனிசிபல் கவுன்சிலின் அனுமதி சில மெஷின்களை வைத்துக் கொள்ள இனி தேவை இல்லை

சென்னை ஜில்லா முனிசிபாலிடி சட்டம் 250 ஆவது செக்ஷன்படி முனிசிபல் எல்லைக்குள் புதிதாகத் தொழிற்சாலைகள் எற்படுத்தவும், விசையால் ஓடும் யந்திரங்களை அமைத்துக் கொள்ளவும் முனிசிபல் கவுன்சிலுக்கு மனுப் போட்டு அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்விதி இனி கீழ்க்கண்ட யந்திரங்களுக்குக் கிடையாது:—

(1) சொந்த உபயோகத்திற்கு அல்லது சௌகரியத்திற்கு அல்லது வீட்டு உபயோகத்திற்காக வைத்துக்கொள்ளும் மின்சார சாதனங்களும் யந்திரங்களும் (Electrical appliances, electrical machinery).

(2) இரண்டு குதிரை பலத்திற்கு (Horse power) மேற்படாத மேலேகண்ட உபயோகத்திற்காக வைத்துக் கொள்ளும் (மின்சாரமில்லாத) சாதனங்களும் யந்திரங்களும்.

(3) உண்மையாய் விவசாய காரியங்களுக்கு உபயோகப் படுத்தப்படும் எலெக்ட்ரிக் மோட்டார் முதலிய சாதனங்கள்.

(4) மேற்கண்ட உபயோகத்திற்காக வைத்துக் கொள்ளப்படும் இரண்டு குதிரை பலத்திற்குக் குறைவான எலெக்ட்ரிக்கல் அல்லாத யந்திரங்கள்.

(5) சாதாரணமாய் அதிகம் கையாளப் படாத டிரான்ஸ்பார்மர் ஸ்டேஷன்.

(6) கண்டென்சர் ஸ்டேஷன்.

(7) ரெக்டிபையர் ஸ்டேஷன்.

(6-6-50 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I A—ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 67)

PRINTED BY N. RAMARATNAM, MA, B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUPUVANAM, TIRUVADAMARUDUR, EDITED AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73. DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD.

# "வக்கீல்"

## பொது மக்களுக்கான சட்டப் பத்திரிகை

(மாதம் ஒரு முறை)

எளிய தமிழில், புதிது
புதிதாய் வரும் இந்திய யூனியன்
சட்டங்களையும், சென்னை சட்டங்களையும்,
கண்ட்ரோல், ரேஷன், லைசென்ஸ், விலை நிர்ணயம், வரி
பற்றிய சர்க்கார் அறிக்கைகளையும் சுலபமாயும்
தெளிவாயும் அனைவரும் அவ்வப்பொழுது
தெரிந்து கொள்ளலாம்.

விசேஷ பகுதிகள்: வழக்கும் – தீர்ப்பும்; கேள்வி – பதில்
**பிரதி இங்கிலீஷ் மாத முதல் தேதி வெளியாகும்**

(சந்தா விபரம்)

| | | |
|---|---|---|
| வருட சந்தா (அதாவது 12 இதழ்களுக்கு) | ... ... ... ... | ரூ. 3—0—0 |
| தனிப்பிரதி | ... ... ... ... | 0—4—0 |
| வெளிநாடு வருட சந்தா | ... ... ... ... | 6—0—0 |

எல்லா சுதேசமித்திரன் ரயில்வே புக்ஸ்டால்களிலும்,
ஹிக்கின்பாதம் ரயில்வே புக்ஸ்டால்களிலும் கிடைக்கும்.

## "வக்கீல்" காரியாலயம்

தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம். (தென் இந்தியா)

Regd. No. M. 5399

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.




பிராஞ்சு : (மன்னார்குடி)

**கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்ற**

சந்தனாதித்தைலம் அரைக்கீரைவிதைத்தைலம்

## கோகுல் கூந்தல் தைலம்

**வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள் பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.**

**SOLE AGENTS:**

| *For Madras* | *For Coimbatore, Palghat & Nilgiris* |
|---|---|
| **Suraj Agencies,** | **B. Balapattabi Chettiar,** |
| **Madras.** | **246, Vysyal St., Coimbatore.** |